# 64 ஆவது ஆண்டு விழா மலர்



# அரும்பு 3

## கிளி/ ஞானிமடம் அ.த.க பாடசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளி / ஞானிமடம் அ.த.க. பாடசாலை

# 64 ஆவது ஆண்டு விழா

## அரும்பு – 03

**வெளியீடு**

கிளி / ஞானிமடம் அ.த.க பாடசாலை

பூநகரி, கிளிநொச்சி

12.10.2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைக்கீதம்

வாழ்க வாழ்க வாழ்க – எங்கள்
வித்தியாலயம் வாழ்கவே ஞானிமட வித்தியாலயம்
வாழ்க வாழ்க வாழ்கவே

நெல்வளம் பனைவளம் நிறைந்த மண்வளம்
பொன் சொரியும் பூநகர் வாழ்க வாழ்க வாழ்கவே

வித்தைகள் பல தந்தும் விக்கினம் தீர்க்கும்
விநாயகர் அருள் கொண்ட ஞானிமடம் வாழ்கவே

(வாழ்க வாழ்க)

அன்பும் அறிவும் தந்திடும் – எங்கள்
அதிபர் ஆசிரியர் வாழ்க வாழ்கவே

(வாழ்க வாழ்க)

ஒழுங்குடன் கல்வியைக் கற்றிடும் – எங்கள்
மாணவமணிகள் வாழ்க வாழ்க வாழ்கவே.

(வாழ்க வாழ்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலையின் தூரநோக்கு

சர்வதேச சமூகத்தில் வாழ்வதற்கான தரமான கல்வியை வழங்கி நற்பிரஜைகளை உருவாக்கல்

## பணிக்கூற்று

மாறிவரும் உலகின் அறைகூவல்களுக்கு முகம் கொடுத்து ஆரோக்கிய வாழ்விற்குரிய அடிப்படையை வழங்கி வாழ்வில் மேம்பட்டவராக்கல்

## Vission

Creating good citizens by providing with quality education in order to live among the international communities.

## Mission

To uplift the life by providing the fundamentals for a healthy life in order to face the challenges of the modern changing world.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரும்பு மலர்க்குழு

| | | |
|---|---|---|
| கௌரவ ஆலோசகர் | : | திருமதி.தவமலர் கனகசபை (அதிபர்) |
| மலராசியர் | : | திருமதி சுபாஜினி இந்திரவர்மன் |
| மலர்க்குழு | : | திருமதி.வி.சோதிநாதன் (பிரதி அதிபர்)<br>திரு.சி.சிங்கராசா<br>திருமதி.ஆ. முகுந்தன்<br>திருமதி.வா. ஹரிகரன்<br>திருமதி.ய.ரஜீனந்தா<br>திருமதி. ஶ்ரீ. சிவரூபன் |
| பாடசாலை மலர் | : | அரும்பு - 03<br>2015 |
| அச்சுப்பதிப்பு | : | தீபம் பிறிண்டேர்ஸ்,<br>717,கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். |
| வெளியீடு | : | கிளி/ஞானிமடம் அ.த.க.பாடசாலை<br>பூநகரி, கிளிநொச்சி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் குழாம்



**முன்வரிசையில் இருப்போர் (இடமிருந்து வலமாக)**

திரு.சி.சிங்கராசா(பிரதி அதிபர்), திருமதி.ய.றஜினந்தா, திருமதி.த.கனகசபை(அதிபர்), திருமதி.வி.சோதிநாதன்

**இரண்டாவது வரிசையில் நிற்போர் (இடமிருந்து வலமாக)**

திருமதி.வா.ஹரிகரன், திருமதி.சு.இந்திரவர்மன், திருமதி. ஆ.முகுந்தன், திருமதி.ஸ்ரீ.சிவரூபன், திருமதி.தி.சசிக்குமார், திருமதி.மி. ஜெயகாந்தன், திருமதி.க.நிசாந்தன், திருமதி.அ.சிவநேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே......

| | | |
|---|---|---|
| 01. | வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளரின் வாழ்த்துச்செய்தி | viii |
| 02. | வலயக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி | ix |
| 03. | பிரதேச செயலாளரின் ஆசிச்செய்தி | x |
| 04. | 64வது ஆண்டு விழா வாழ்த்துச்செய்தி (பிரதிக்கல்விப் பணிப்பாளர்) | xi |
| 05. | அரும்பு இதழ்களுக்கான வாழ்த்துச்செய்தி (பிரதிக்கல்விப்பணிப்பாளர்) | xii |
| 06. | பிரதிக் கல்விப்பணிப்பாளரின் வாழ்த்துச்செய்தி | xiii |
| 07. | முன்மாதிரிச் செயற்பாடு (உதவிக்கல்விப் பணிப்பாளர்,வர்த்தகம்) | xiv |
| 08. | கோட்டக்கல்விப் பணிப்பாளரின் உள்ளத்திலிருந்து... | xv |
| 09. | கிராம அலுவலரின் வாழ்த்துச்செய்தி | xvii |
| 10. | வாழ்த்துச் செய்தி (முன்னாள் கொத்தணி அதிபரும்,பழைய மாணவனும்) | xviii |
| 11. | வாழ்த்துச்செய்தி (சமாதான நீதவான்) | xix |
| 10. | முன்னாள் தமிழ்பாட ஆசிரியரின் வாழ்த்துச்செய்தி | xx |
| 13. | அதிபர் அறிக்கை | xxi |
| 14. | இதழாசிரியரின் எண்ண அலைகளில்... | xxiii |
| 15. | பாடசாலை இலச்சினை | 01 |
| 16. | முயற்சி திருவினையாக்கும் | 06 |
| 17. | அம்மா(கவிதை) | 09 |
| 18. | பள்ளிவாழ்வு | 10 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 19. | நினைப்பதொன்று | 11 |
| 20. | பாடசாலை மாணவியின் குமுறல் | 14 |
| 21. | விடுகதைகள் | 15 |
| 22. | கோள்கள் பற்றிய தகவல்கள் | 16 |
| 23. | கணிதப் பொது அறிவு | 17 |
| 24. | புகைத்தலினால் ஏற்படும் தீங்கு | 18 |
| 25. | மூளையைப் பலப்படுத்தும் உணவுப் பொருட்கள் | 19 |
| 26. | ஒழுக்கம் விழுப்பம் தரும் | 20 |
| 27. | பழந்துணி (சுயசரிதை) | 22 |
| 28. | பிந்தி வந்த ஐந்து நிமிடம் | 25 |
| 29. | உயிரோட்டம் | 26 |
| 30. | என் பள்ளி | 27 |
| 31. | யானை, குட்டிப்பூனை | 28 |
| 32. | குருவை வணங்குவோம், விடுகதை | 29 |
| 33. | பூக்கள், சிறுவர் பாடல் | 30 |
| 34. | அன்புள்ள அம்மா | 31 |
| 35. | பொது அறிவு | 32 |
| 36. | மதுபோதையை ஒழிப்போம் | 33 |
| 37. | எல்லோருக்கும் சமனான கல்வி, பொது அறிவு | 34 |
| 38. | வண்ணப்பூ | 35 |
| 39. | அன்றும் இன்றும் பாடசாலை | 36 |
| 40. | என்னால் மறக்க முடியவில்லை | 37 |
| 41. | பொது அறிவு | 38 |
| 42. | அடிப்படை விதிகள் | 39 |
| 43. | உலகை ஐக்கியப்படுத்துவோம் | 41 |
| 44. | Big Surprise | 44 |
| 45. | Colour Poem | 45 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

46. Computer 46

47. Father 47

48. The fox without tail 48

49. Parrot 49

50. My Self, Sigiriga 50

51. My Pet, My School 51

52. Sixty seconds make a minute 52

53. We Should Save Electricity 53

54. Future Environment 54

55. Advantages and Disadvantages of T.V 55

56. Best Friends 56

57. எங்கள் பாடசாலை 57

58. மனவெழுச்சி சார் நுண்மதிகள் 58

59. ஆளுமை வளர்ச்சி மீது தாக்கம் செலுத்தும் காரணிகள் 62

60. வெற்றிகரமாக பரீட்சைகளை எதிர்கொள்வோம் 65

61. தொடரும் 69

62. செய்ய வேண்டியவை 72

63. இயற்கையோடு இணைந்து விவசாயம் செய்வோம் 73

64. Poem When I Saw My home 76

65. 64வது ஆண்டு நிறைவில் பரிசு பெறும் மாணவர் விபரம் 77




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளரின்

# வாழ்த்துச்செய்தி



மக்கள் வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கு கல்வி மிகவும் அத்தியாவசியமான ஒன்று. "ஐந்தில் வளையாதது ஐம்பதிலும் வளையாது" என்பார்கள், இந்த வகையில் ஒரு பிள்ளையின் அடித்தளம் ஆரம்பக் கல்வியிலேயே தங்கியுள்ளது. இந்த வகையில் இப் பிரதேச மாணவர்களை நல்லதொரு பிரசையாக இச்சமூகத்திற்கு கையளிப்பதில் மிக முக்கிய பங்கினை பூநகரியில் அமைந்துள்ள கிளி/ஞானிமடம் அ.த.க பாடசாலை வழங்கியுள்ளது.

வருடந்தோறும் வெளியிட்டு வரும் "அரும்பு" என்ற இம்மலர் பல சிறந்த ஆக்கங்களுடன் வெளிவருவது மாணவர்களுக்கு மிகுந்த பயனைத்தரும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. இம்மலர் சிறப்புடன் வெளிவர உழைத்த அனைவரையும் பாராட்டுவதுடன் எனது நல்வாழ்த்துக் களையும் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

அத்துடன் வளர்ந்து வரும் கல்விச் சமூகத்தின் ஆற்றல்களை வெளிப்படுத்துவதற்கு நல்லதொரு களமாக இப்பாடசாலையின் மாணவ சமுதாயம் இம் மலரினை பயன்படுத்த வேண்டும். இம் மலரிலுள்ள ஆக்கங்கள் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கும் பெரிதும் துணைபுரியும்.

தனது 64 வயதினைப் பூர்த்தி செய்து ஆண்டு விழாவினைக் கொண்டாடிக் கொண்டிருக்கின்ற இந்நேரத்தில் வருடா வருடம் வெளியிடும் சஞ்சிகையான அரும்பு மலரினை வெளியிடத் தீர்மானித்த அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களைப் பாராட்டுவதுதோடு, இம் மலர் சிறப்புடன் வெளிவர எனது நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு.த.குருகுலராசா**
கல்விப் பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை
மற்றும் இளைஞர் விவகார அமைச்சர்.
வடக்கு மாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 64வது அகவைக்கும் அரும்பு - 03க்கும் என் இனிய வாழ்த்துக்கள்



"ஞானிமடம்" என்ற பெயர் மிகவும் உன்னதமானது "ஞானி" என்பது என்பது அறிவு, அதுவும் மேலான அறிவு. ஆழலான அறிவு கொண்டவர் களையே "ஞானி" என்று போற்றுகின்றது கற்றோர் உலகு.

இந்த அழகிய, அற்புத ஊரில் உள்ளவர்களின் குழந்தைகளை வரும் காலத்தில் நல்ல ஞானம் மிக்கவர்களாக உயர்த்துவதற்கென்றே ஞானிமடம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை உருவாக்கப் பட்டிருக்க வேண்டும்.

இவ்வாறு உயர்ந்த இலட்சியத்துக்காய் உருவாக்கப்பட்ட இப் பாடசாலை மெல்ல மெல்ல வளர்ந்து இன்று 64 வயதை அடைந்து விட்டமை மகிழ்ச்சி தருகிறது.

குழந்தைச் செல்வங்களை அரும்புகள் என்று அழைப்பதில் அலாதிப் பிரியம் உண்டு. இத்தகைய அர்த்தமுள்ள பெயர் தாங்கி வெளிவரும் அரும்பு 03 சஞ்சிகையை வாழ்த்துவதோடு, "ஞானிமடம்" ஈன்றெடுத்த மக்களையும் மழலைகளையும், வித்தியாலயத்தையும் அதிபர், ஆசிரியர்களையும் இந்த அரிய சந்தர்ப்பத்திலே வாழ்த்துவதோடு எல்லாம் வல்ல இறைவனின் ஆசியையும் வேண்டி நிற்கின்றேன்.

**திரு.க.முருகவேல்**
வலயக்கல்விப் பணிப்பாளர்.
வலயக் கல்வி அலுவலகம்.
கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிரதேச செயலாளரின் ஆசிச் செய்தி

ஞானிகளும் சித்தர்களும் வாழ்ந்ததாகப் பேசப்படும் ஞானிமடம் நெய்தல், மருதம் எழில் சூழ்ந்து காணப்படுகின்றது. எழில் கொஞ்சும் இவ்வூரில் அழகிய கட்டட சோலையாய் காட்சி தருவது கிளி/ஞானிமடம் அ.த.க.பாடசாலை. இப்பாடசாலை தனது 64வது ஆண்டையொட்டி வெளிவரும் அரும்பு – 03 சஞ்சிகைக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்வடைகின்றேன்.

2013 ஆம் ஆண்டில் க.பொ.த. சாதாரணம் வரை கொண்ட பாடசாலையாக இப்பாடசாலை தரம் உயர்த்தப்பட்டது. இங்கு பாரம்பரியமாக வாழ் சமூகத்தையே இப்பாடசாலை கொண்டுள்ள போதும் வலயம், மாவட்டம், மாகாகணம், தேசியமட்டம் என கல்வி சார் போட்டிகளில் மாணவர்கள் அக்கறை கொண்டுள்ளமை சிறப்பானது. இத்தகைய மாணவ மணிகளின் கைவண்ணத்தில் காட்சிதரும் அரும்பு – 03 பல அற்புதமான ஆக்க இலக்கியங்களை, இலக்கிய முயற்சிகளை அரங்கேற்றுவது, தளம் அமைத்துக் கொடுப்பது என்பது உண்மையில் பாராட்டப்படவேண்டியது.

இவ்வரும்பானது மேலும் சிறப்புக்கொண்டதாய் பிரகாசிக்க வாழ்த்தவதோடு இப்படைப்புக்கு பக்கபலமாக இருக்கும் பாடசாலையின் அதிபர் திருமதி. தவமலர் கனகசபை அவர்களையும் ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரையும் மனநிறைவோடு பாராட்டி இச்சஞ்சிகை சிறப்பாக வெளிவர ஆசிகளையும் கூறி அமைகிறேன்.

**திரு.சி.ச.கிருஷ்னேந்திரன்**
பிரதேச செயலாளர்.
பூநகரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 64வது ஆண்டு விழா
# வாழ்த்துச்செய்தி



பூநகரிக் கோட்டத்தில் மருதநிலம் சூழ அமைந்துள்ள கிளி/ஞானிமடம் அ.த.க. பாடசாலையானது தரம் 01 தொடக்கம் 11 வரையுள்ள 54 மாணவரை உள்ளடக்கி மிகச் சிறப்பாக இயங்கி வரும் பாடசாலையாகும். இப் பாடசாலையானது பௌதீக வளங்களையும் ஆளணி வளங்களையும் போதியளவு பெற்றுச் சிறப்பான வகையில் செயற்பட்டுக் தேசிய கோட்ட மாகாண, வலய, கோட்ட மட்டத்தில் சாதனைகளைப் படைத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இப் பாடசாலையின் 64 ஆவது ஆண்டு நிறைவு விழா சிறப்பாக அமைய வேண்டும் எனவும், மாணவர்களின் சிறந்த ஆக்கங்களை உள்ளடக்கிய "அரும்பு 3" மலர் வெளியீடு சிறப்பாக அமைய வேண்டும். எனவும் வருடா வருடம் சிறந்த ஆக்கங்களை உள்ளடக்கி அரும்பு மலர் வெளியிடப்பட்டு முன்னோடியாக இப்பாடசாலை திகழ வேண்டும் எனவும் மனதார வாழ்த்துகின்றேன்.

**திருமதி.உ.புவனராசா**
பிரதிக் கல்விப் பணிப்பாளர் நிர்வாகம்,
வலயக்கல்வி அலுவலகம்,
கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அரும்பு இதழ்களுக்கான வாழ்த்துச் செய்தி

கிளி/ஞானிமடம் அ.த.க பாடசாலையின் 64வது ஆண்டு விழாவை யொட்டி அரும்பு – 03 இதழானது வெளியாவதில் பெருமகிழ்வெய்தி வாழ்த்துகின்றேன். கிளிநொச்சி மாவட்டத்திலே பூநகரிப் பிரதேசத்தின் மையமென விளங்கும் பகுதியில் அமைந்திருக்கும் இப் பாடசாலையில் தரம் 11 வரை மாணவர்கள் கல்வி கற்கின்றனர். குறைந்தளவே மாணவர் தொகையினர் ஆயினும் பாடசாலையின் ஆக்கச் செயற்பாடுகளும் இணைபாட விதனச் செயற்பாடுகளும் குறைவின்றி தொடர்வது பாராட்டுதற்கு உரியது.

மாணவர்களின் அறிவுத் தேடலை, ஆக்க சிந்தனையை எழுத் தாற்றலை வெளிக் கொணர்வதில் இவ்வாறான இதழ்கள் பாடசாலைக் காலங்களில் களம் அமைத்துக் கொடுக்கின்றன. அத்துடன் தமது ஆக்கங்கள் அச்சுப்பதிப்பில் உருவாகி வெளி வருவதில் மாணவர்கள் பெருமிதமும், ஊக்கமும் அடைகின்றனர். இவை ஏனைய மாணவர்கள் ஆக்கங்களைப் படைப்பதற்கு தூண்டு கோலாக அமைகின்றன. அத்துடன் மாணவர்களின் ஆளுமை விருத்திக்கும் பங்களிப்பு செய்கின்றன.

அரும்பு இதழானது தொடர்ச்சியாக மூன்றாவது இதழாக வெளி வந்திருப் பதில் இப் பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பாடசாலைச் சமூகத்தின் பங்கு மெச்சத்தக்கது. இவ்வாறான பாடசாலையில் இதழ்கள் தொடர்ச்சியாக வெளி வருவதென்பது கடினமானதும், கூட்டு முயற்சியின் விளைவான அறுவடை யாகும்.

எதிர்வரும் காலங்களிலும் இவ்வாறான படைப்புகள் இப் பாடசாலை யினால் வெளிக் கொணரப்பட வேண்டும் என்பது எனது அவாவாகும். இவ் வாகத்திற்கு அரும்பாடுபட்ட இப் பாடசாலை அணியினரை மீண்டும் மனதார வாழ்த்துவதோடு, இப் பாடசாலையானது எதிர்வரும் காலங்களில் மேலும் மேலும் சிறந்து மிளிர இறையாசி வேண்டி நிற்கின்றேன்.

**திருமதி.க.அபிராமி**
**பிரதிக் கல்விப் பணிப்பாளர்.**
**வலயக் கல்வி அலுவலகம்.**
**கிளிநொச்சி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதிக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



கிளி/ஞானிமடம் அ.த.க பாடசாலையின் 64வது ஆண்டு நிறைவை முன்னிட்டு வெளியிடவுள்ள "அரும்பு 3 சிறப்பு மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் பெருமகிழ்ச்சியும் பெருமிதமும் அடைகின்றேன்.

கல்வி இலக்குகளை மாணவர்கள் அடைந்து கொள்வதற்கு அடிப்படைக்களமாக அமைவன பாடசாலைகளேயாகும். இன்றைய உலக நிலைமைகளுக்கு ஈடு கொடுத்து உலகில் தமக்கென ஓரிடத்தினைப் பெற்று மகிழ்ச்சிகரமான வாழ்க்கைப் பணியினை மாணவர்கள் ஏற்படுத்திக் கொள்வதற்கு பாடசாலைகளே முக்கிய பயிற்சிக் களங்களாகும். இவ்வாறான மானிட மற்றும் சமூகப் பொறுப்புக்களைக் கொண்ட பாடசாலைகள் பரிபூரண வளர்ச்சியினையும் பண்பினையும் கொண்டனவாக அபிவிருத்தி அடைய வேண்டியது காலத்தின் தேவையாகும்.

இந்தவகையில் இப்பாடசாலையானது தனது 64வது ஆண்டில் கால்தடம் பதிக்கும் இத்தருணத்தில் அதன் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பாடசாலைச் சமூகத்தினர் ஆகியோருக்கு அவர்கள் தம்பணியிலே மென்மேலும் சிறக்க எவ்வித தடைகளுமின்றி எல்லா வளங்களும் கிடைக்க இறைவன் அருள் வேண்டி வாழ்த்துகின்றேன். அத்துடன் "அரும்பு 3" மலரானது இப்பாடசாலையின் வரலாற்று ஆவணமாகவும் கல்விச் சமூகத்திற்கு பயனுள்ள நூலாகவும் அமைய எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**செல்வி. ஜனனி சிவப்பிரகாசம்**
பிரதிக் கல்விப் பணிப்பாளர் (திட்டமிடல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்மாதிரிச் செயற்பாடு



கிளி/ஞானிமடம் அ.த.க.பாடசாலை மாணவ வளத்தைக் குறை வாகக் கொண்டுள்ள போதும் தொடர்ந்து மூன்றாவது வருடமாக "அரும்பு" சஞ்சிகையை வெளியிடுவது மகிழ்ச்சி தருவதாகும். மாணவர்களிடம் உள்ளார்ந்து பல்வேறு திறன்கள் காணப்படுகின்றன. இத்திறன்களை இனங்கண்டு, அவற்றைச் சுடர் விடச் செய்வதிலேயே ஆசிரியரதும், பாடசாலையினதும் வெற்றி தங்கியுள்ளது.

சரிவர இனங்காணப்பட்டு திறன்கள் விருத்தி செய்யப்பட்ட பிள்ளைகள் சமூக வளமாகத் திறன்கள் விருத்தி செய்யப்பட்ட பிள்ளைகள் சமூக வளமாகத் திகழ்வார்கள். இது நாட்டின் பேண்தகு அபிவிருத்திக்கு வழிகோலும்.

இத்தகைய உள்ளார்ந்த திறன்களை ஹாவார்ட் கார்டினர் என்பவர் நுண்மதிகள் என்று குறிப்பிடுகிறார். ஒவ்வொருவரிடமும் எட்டு வகையான நுண்மதிகள் உட்பொதிந்து கிடக்கின்றன. இவற்றை மிளிரச் செய்வதில் தான் அவர்கள் ஆளுமை மிக்கவர்களாகின்றனர். இதனை வலியுறுத்ததும் கார்டினரின் கோட்பாடு பன்முக நுண்மதிக் கோட்பாடாகும்.

களப்பயணங்கள், கண்காட்சிகள், கலை இலக்கியச் செயற் பாடுகள், செயற்பட்டறைகள், மன்றங்கள், உடலியக்கச் செயற்பாடுகள், ஆக்கச் செயற்பாடுகள் என்பன "அறிகை" விருத்திக்கு உதவி, ஆளமையைக் கட்டியெழுப்பும் வலுமிக்க செயற்பாடுகளாக உள்ளன.

அவ்வகையில் இப்பாடசாலை வெளியிடும் "அரும்பு" மாணவர் களது படைப்பாக்கத்திறன் விருத்திக்கு பெரிதும் உதவுவதாகும். இது வரவேற்கத்தக்க முன்மாதிரிச் செயற்பாடு எனலாம். இதனை வெளியிடும் பாடசாலை சமூகத்துக்கு எனது பாராட்டுக்கள்.

**திரு.சு.ஸ்ரீகுமரன்**
உதவிக் கல்விப் பணிப்பாளர்.(வர்த்தகம்)
வலயக்கல்வி அலுவலகம்
கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கோட்டக் கல்விப் பணிப்பாளரின் உள்ளத்திலிருந்து....

கிளி/ஞானிமடம் அ.த.க பாடசாலையில் வருடாவரும் வெளிவரும் அரும்பு சஞ்சிகை உண்மையில் அரும்பு ஒரு கரும்புதான். அதன் ஆக்கங்கள், ஆக்கங்களை ஒரு புத்தகத்தில் சேர்த்து அவற்றை வைக்கின்ற வைப்புமுறை அனைத்துமே மிகவும் அற்புதமானது. இவ்வருடமும் அரும்பு சஞ்சிகை வெளிவருவதை இட்டு நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன். அரும்பு சஞ்சிகையை எழுத்துருவில் கொண்டு, வர முன்னின்று உழைக்கும் இப்பள்ளியின் முதல்வர் திருமதி. தவமலர் கனகசபை அவர்களையும், திரைமறையில் நிதியுதவி வழங்கும் உள்ளங்களையும் சிலருடன் பாடுபட்டு உழைக்கும் ஆசிரியர்களையும் நான் மனதாரப் பாரட்டுகின்றேன்.

ஒரு கல்லுக்குள் எவ்வாறு ஒரு சிற்பம் மறைந்திருக்கின்றதோ அதே போன்று ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் ஏதோ ஒருவிதமான ஆளுமை மறைந்திருக்கின்றது இந்த ஆளுமையை வெளிக் கொணர்வதற்கு இவ்வாறான சஞ்சிகைகள் நல்லதொரு களமாக அமையும் என நான் நம்புகின்றேன். இந்த வகையில் ஊக்கப்படுத்தாத கல்வி "மளுங்கிய மரத்தில் அடிக்கும் ஆணிக்கு சமனானது" இந்த வகையில் மாணவர்களை ஊக்கப்படுத்தி ஆசிரியர்கள், மாணவர்கள் எழுத்துருவில் இவ்வாறான ஒரு இதழை வடித்தெடுத்து சமூகத்திற்கு சேர்ப்பது மிகவும் பாராட்டுக்குரியது.

ஞானிமடம் அயலில் நாகதேவன் துறைமுகப்பட்டணம் ஒரு காலத்தில் பெரும் வணிகர்கள் கூட்டம் வணிகம் செய்து யாகங்கள் நடாத்தி ஞானிகளுக்கு மடம் அமைத்தது. ஆண்டிகளுக்கும், ஆதரவு அற்றவர் களுக்கும் உண்டியும், படுத்துறங்க உறைவிடமும் கொடுத்து மொட்டக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கறுப்பன் அரிசி கொண்டு சமைத்து அமுதூட்டுகின்ற பழம்பெரும் மரபு இன்று வரை பூநகரி மக்களிடையே இரத்தத்தில் ஊறி கிடப்பதை அவதானிக்க முடிந்தது மிகவும் மகிழ்ச்சியளிக்கின்றது

எவ்வாறு இருந்தபோதும் அதிகரித்த தொலைபேசி பாவனை இலத்திரனியல் ஊடகங்களுடன் வாழும் இன்றைய உலகில் ஒரு கடிதத்தை தானும் எவரும் எழுத முன்வருவதில்லை. இவ்வாறான இந்த காலகட்டத்தில் இவ்வாறான அரும்பு இதழ் வெளிவருவதுடன் இது விருட்சமாக வளர எனது நல்லாசிகள் உரித்தாகட்டும்.

**திரு.த.தர்மரட்ணம்**
**கோட்டக்கல்விப் பணிப்பாளர்,**
**பூநகரி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கிராம அலுவலரின் வாழ்த்துச் செய்தி

புகழ் பூத்த பூநகரிப் பிரதேசத்தில் நல்லவர்களும் ஞானிகளும் வாழ்ந்து பெருமையினை ஏற்படுத்தியதும் செந்நெல்லும், ஓங்கி வளரும் பனைவளமும் கொண்டு திகழும் ஞானிமடம் கிராமத்தில் கல்வியை வழங்கும் கலங்கரை விளக்கமாகக் காட்சியளிப்பது கிளி/ ஞானி மடம் அ.த.க. பாடசாலையாகும்.

தரம் 1 – 11 வரையான வகுப்புக்களைக் கொண்டு கல்வி, கலை, கலாச்சாரம், விளையாட்டுக்கள் போன்றவற்றில் மேம்பாடுடையதாக கோட்ட, வலய, மாகாண, தேசிய மட்டப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களைத் தாங்கி நிற்கும் திறனுடைய பாடசாலையாகக் காணப்படுவதும் மாணவர்கள் ஆளுமை, தலைமைத்துவம், தொடர்பாடல், படைப்பாற்றல் போன்ற பல் ஆக்கத் திறன்களைக் கொண்டு விளங்குவதை வருடாவருடம் இப்பாடசாலையில் வெளியிடப்படும் "அரும்பு" சஞ்சிகை எடுத்துக் காட்டுகின்ற நிலையில் இவ்வருடமும் " அரும்பு 3" என்ற சஞ்சிகை அரும்புவதையிட்டு மகிழ்ச்சியடை கின்றேன். இப்பாடசாலைக்குப் பெருமை சேர்க்கும் இக் கைங் கரியத்திற்கு வழி சமைத்த பாடசாலையின் முதல்வர் திருமதி. தவமலர் கனகசபை அவர்களையும் நூலாசிரியர் அவர்களையும் நூலாக்கக் குழுவினரையும் இவ்விதழின் படைப்பாளிகளையும் மனம் மகிழ வாழ்த்துகின்றேன்.

**திரு.ச.தவராசா**
கிராம அலுவலர்.
ஞானிமடம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

"அரும்பு" சஞ்சிகை - 3 வெளியீடு செய்வதையிட்டு பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் ஆகியோரை மிகு உவகையுடன் வாழ்த்துகின்றேன். மாணவர் ஆக்கத் திறன் வெளிப் பாட்டிற்கு இச்சஞ்சிகை மிக உந்து சக்தியாக விளங்கும் என்பதில் சந்தேக மற உணர்கின்றேன். சஞ்சிகையின் வினைத்திறன் எதிர்கால சந்ததி யினரின் செயலிலேயே தங்கியுள்ளது.

**திரு.கா. குலசேகரம்**
முன்னாள் கொத்தணி அதிபரும்.பழைய மாணவனும்
சித்தன்குறிச்சி
பூநகரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

பூநகரிப் பிரதேசத்திலே வளர்ச்சியடைந்து வரும் பாடசாலைகளில் ஞானிமடம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையும் முன் மாதிரியாகத் திகழ்ந்து வரும் பாடசாலைகளில் ஒன்றாகும். இப்பாடசாலையின் வளர்ச்சி கருதி அரும்பு 3 வெளியிடுவதையிட்டு நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இப்பாடசாலை கல்விச் செயற்பாட்டிலும் இணைப்பாடச் செயற் பாட்டிலும் முன்னிலையில் உள்ளது. அத்துடன் பல இடப்பெயர்வுகளையும் சந்தித்தும் புதிய பாடசாலையை உருவாக்கிய பெருமையும் கொண்ட நிலையில் அரும்பு 3 வெளியிடுவது பாடசாலைக்கும் இப் பகுதி வாழ் மக்களுக்கும் மாணவர்களுக்கும் பெருமகிழ்ச்சியைத் தருகின்றது. இக்கால கட்டத்தில் பாடசாலையின் தாபகரும் சமூகசேவையாளருமான திரு சின்னப்பு ராமுப்பிள்ளை அவர்களை வாழ்த்தி நினைவு கூறாமல் இருக்க முடியாது. இப்பாடசாலையில் தொடர்ந்து வருடாவருடம் அரும்பு வெளியீடு நடைபெற வேண்டும் என்றும் பாடசாலை மேலும் வளர்ச்சியடையவும் இப்பகுதி பிள்ளைகளின் தரமான கல்வியை மேலோங்க செய்யவும் எல்லாம் வல்ல கொட்டிலுப் பிள்ளையாரை வேண்டி நிற்கின்றேன்.

**திரு. இரா. செல்வராசா**
சமாதான நீதவான் (JIP)
தலைவர் கமநலச் சேவை நிலையம், பூநகரி
தலைவர் இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், பூநகரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் தமிழ் பாட ஆசிரியரின் வாழ்த்துச்செய்தி



அரும்பு 3 என்ற மலர் பரிணமிக்க இயலுமையை நல்கிய இறைவனது பேரருளுக்கு சிரம்தாழ்த்தி, கிளி/ஞானிமடம் பாடசாலை ஆண்டுதோறும் வெளியிடுகின்ற "அரும்பு" மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பேருவகை அடைகின்றேன்.

மலரினை வெளியிடுவதற்கு உழைத்த அத்தனை பேருக்கும் மனமார்ந்த பாராட்டுக்கள் உரித்தாகுக. ஆசிரியர்களினதும், மாணவர் களினதும் படைப்பாற்றலைத் தூண்டி தேடல் ஆர்வத்தையும் வாசிப்புத் திறனையும் சமூகத்திற்கு எடுத்தியம்ப மலரினை வெளியிடுவதனை இட்டு முன்னாள் மலராசிரியர் என்ற வகையில் வாழ்த்துவதில் மனநிறை வடைகிறேன்.

மாணவர்களின் இயலுமைகளை வெளிப்படுத்துவதற்கு மேற்படி பாடசாலை உரிய களம் அமைத்துக் கொடுத்துள்ளது. எதிர்காலத்தில் மாணவர்கள் தங்கள் இலக்கிய புலமையை வெளிப்படுத்தவும் கூட்டுணர்வை மேம்படுத்தவும் பாடசாலைக் காலத்திலேயே அதற்குரிய சூழல் உருவாக்கப் பட்டிருப்பது வரவேற்கத்தக்கதாகும். அந்தப்பணியை பொருளாதார பிரச்சினை களுக்கு மத்தியிலும் தொடர்ந்து செய்துவரும் இப்பாடசாலை ஏனைய பாடசாலைகளுக்கு முன்மாதிரியாக, வழிகாட்டியாக காணப்படுகிறது. எதிர்வரும் காலங்களிலும் கனதியான ஆக்கங்களோடு அரும்பு வெளிவர இறைவனை இறைஞ்சுகிறேன். இப்பணிக்கு தங்களை அர்ப்பணித்த அத்தனை பேருக்கும் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவிப்பதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

**திரு.அ.லிங்கராஜ்**
முன்னாள் தமிழ் பாட ஆசிரியர்.
M.A.Hons,MED Hons



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர் அறிக்கை



கிளி/ஞானிமடம் அ.த.க. பாடசாலை 64வது ஆண்டில் காலடி எடுத்து வைக்கின்ற இந்நேரத்தில் நாம் "அரும்பு 3 சஞ்சிகை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். எமது பாடசாலை தரம் 01 –11 வரையான வகுப்புக்களைக் கொண்டுள்ளது. கல்விகற்கின்ற மாணவர்களின் உள்ளார்ந்த திறன்களையும் ஆசிரியர்களின் திறன்களையும் வெளிப் படுத்தும் வகையில் அவர்களின் ஆக்கங்களை தாங்கி மூன்றாவது இதழாக அரும்பு வெளிவருகின்றது.

இப் பாடசாலையானது போதிய பௌதீக வளங்களையும் கொண்டுள்ளது. ஆசிரிய வளங்களைப் பொறுத்தவரை சங்கீதம், சித்திரம் போன்ற பாடங்களுக்கு பற்றாக்குறையாகவுள்ளது. மாணவர்களின் அடைவுமட்டம் வளர்ச்சியடைந்து வருவதைக் காணக்கூடியதாகவுள்ளது. தேசிய மட்டம் வரைசாதனை படைத்த மாணவர்கள் உள்ளனர். பாடசாலைக்கும் சமூகத்துக்கும் உள்ள தொடர்பும் ஒத்துழைப்பும் கூடுதலாக உள்ளது இந்த வகையில் பார்க்கின்றபோது இப்பள்ளியுடன் இணைந்து மேலதிக வகுப்புக்களை நடாத்துவதற்கு சின்னத்தம்பி கல்விக்கூடம் துணைபுரிகின்றது. இதற்கு சித்தன்குறிச்சி, பூநகரியைச் சேர்ந்த திரு.திருமதி. இராசிங்கம் (சுவிஸ்) அவர்கள் அனுசரணை நல்கி வருகின்றனர். வருடாவருடம் இச்சஞ்சிகையினை வெளியிடுவதற்கான நிதியுதவியை பூநகரி ஞானிமடத்தை சேர்ந்த திரு. அமரர் தம்பையா மயில்வாகனம் ஞாபகார்த்தமாக அவரது பிள்ளைகள் வழங்கி வரு கின்றமை குறிப்பிடத்தக்கது. இவ்வருடம் பரிசுப் பொருட்களை வழங்குபவர் சுவிசைச் சேர்ந்த குலசிங்கம் பிறேமச்சந்திரன் (ஞானிடம், பூநகரி) இவர் இப்பாடசாலையின் மீது பற்றுக் கொண்ட பழையமாணவர் ஆவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந் நிகழ்விற்கான ஏனைய அனுசரணைகளை இப்பாடசாலையின் பெற்றோர்கள் வழங்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. அழைப்பிதழ் அனுசரணையை இவ்வூர் பழைய மாணவரான கணேசமூர்த்தி ரஞ்சன் வழங்கியுள்ளார். ஆகவே பெற்றோர்கள் பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் இப்பாடசாலைக்கு ஒத்துழைப்பு வழங்கி வருகின்றமை கண் கூடு. மாணவர்களின் கற்றல் விருத்திக்காக நாம் அனைவரும் ஒன்றுபட்டு உழைத்து இவ்வருடம் க.பொ.த.சா.தரம் பரீட்சையில் 80% அல்லது அதற்கு மேலான சித்தி வீதத்தை பெறுவதற்கு எங்களால் இயன்ற முயற்சியை எடுத்து வருகின்றோம் என்பதையும் இங்கு தெரியப்படுத்த விரும்புகின்றேன். மேலும் இந்நூல் வெளிவருவதற்கு எனக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்த ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் நான் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். எதிர்காலத்தில் எமது பாடசாலை பிரகாசத் துடன் திகழ எல்லாம் வல்ல இறைவன் துணைபுரிவாராக.

**திருமதி.த.கனகசபை**
அதிபர். BED. SLPS 2 - II
கிளி/ஞானிமடம் அ.த.க பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இதழாசிரியரின் எண்ண அலைகளில்.....

வட புலத்தின் வாண்மை மிகு பகுதியாம் பூநகரி நிலத்தின் முத்தென ஒளிரும் ஞானிமடம் என்னும் நற்பெயர் கொண்ட கிராமத்தில் கிளி/ஞானிமடம் அ.த.க பாடசாலையின் மூன்றாவது அரும்பானது பிரசவிக்கும் இத்தருணத்தில் இப்பாடசாலையின் தமிழ்ப்பாடப் பொறுப்பு என்னிடம் கிடைத்ததையிட்டு நான் இறும்பூதெய்துவதோடு இறைவனுக்கு நன்றி செலுத்தவும் கடமைப் பட்டுள்ளேன்.

கடந்த காலத்தில் எமது மாணவச் செல்வங்களால் அடையப்பட்ட பெறுபேற்றுச் சாதனைகள் ஏனைய செயற்பாடுகள் மூலம் கிடைக்கப் பெற்ற பெருமைக்குரிய அடைவுகள் பாடசாலை சார்ந்த விடயங்கள் ஆசிரியர் ஆக்கங்கள், மாணவர் ஆக்கங்கள் எனப் பல்வேறு ஆக்கங்களைத் தன்னகத்தே தாங்கி வெளிவரும் இவ்வரும்பானது மாணவர்களுக்கு மட்டுமன்றி அனைவருக்கும் பயன்படத்தக்க வகையில் ஒரு கரும்பாகவே இனிக்கும்.

இவ் வரும்பானது மாணவர்களது பல்வேறு பட்ட திறமைகளை எடுத்துக் காட்டுவதுடன் அவர்களது எழுத்தாற்றலை வளர்க்கும் ஒரு சாதனமாகவும் அமைந்துள்ளது. இவ்வரும்பு மலராக மலர்வதற்கு பெருமனதுடன் மழைக்கரம் போல் கொடை கொடுத்துதவிய அமரர் தம்பையா குடும்பத்தினருக்கு பாடசாலை சார்பில் நன்றி கூறக் கடமைப் பட்டுள்ளோம்.

இவ்வரும்பிற்கு ஆசிகள் வாழ்த்துக்கள் வழங்கிய அதிபர் ஆசான்களுக்கும் பெரியோர்களுக்கும், ஆக்கங்களை வழங்கிய ஆசிரியர்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களுக்கும் சிறப்புக்கட்டுரைகள் வழங்கிக் கௌரவித்த அறிஞர் பெருமக்களுக்கும் நன்றி கூறுவதுடன் சாதனைகள் மூலம் தம் முத்திரை களைப் பதித்த மாணவச் செல்வங்களையும் பாராட்டி நிற்கின்றோம்.

இவ்வரும்பு மலராக மலர்ந்து நிற்க ஒத்துழைப்பு நல்கிய அதிபர் ஆசிரியர்களுக்கும் சிறப்பாக மலர்க் குழுவினருக்கும் மனப்பூர்வமான நன்றிகள் நிறைவாக இவ்வரும்பினை விரைவாகவும் தெளிவாகவும் கணினிப் பக்க வடிவமைப்புக்குட்படுத்தி நூல்வடிவில் அழகுறச் செய்த தீபம் பதிப்பகத் தினருக்கும் மலர்க்குழு சார்பாக மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மூன்றாம் அரும்பு வெளியாக உதவிய அனைத்து உள்ளங் களுக்கும் இதயம் கனிந்த நன்றி கூறுவதுடன் தொடர்ந்து இவ்வரும்பு வெளிவர வாழ்த்தி விடை பெறுகிறேன்.

**திருமதி சுபாஜினி இந்திரவர்மன்**
ஆசிரியர், ***BA(Hons) Dip.in Ed, SLTS 2 -II***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலையின் கடந்த கால நிகழ்வுகள்











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை இலச்சினை



ச.சயிந்தா
தரம் -10

நான் தான் எம் பள்ளியின் அடையாளம் எம் பள்ளியின் முக்கிய இடங்களிலெல்லாம் மங்கையர் முகத்தில் மாண்புடன் விளங்கும் திலகமென முத்திரை பதிக்கப்படுவேன். என்ன? வாசிக்கும் போது யாரென்று சிந்திக்கின்றீர் களா? எங்கள் பாடசாலையின் கழுத்துப் பட்டியைப் பாருங்கள். பாடசாலையில் இறுமாப்புடன் வீசும் கொடியைப் பாருங்கள். பாடசாலை மாணவத் தலைவர் இலச்சினையைப் பாருங்கள் என்ன? இப்போதாவது என்னைத் தெரிகிறதா? நான் தான் கிளி/ஞானிமடம் அ.த.க பாடசாலை யின் பெருமைகளை விளக்கப்போகும், அழகாகப் பாடசாலையை அலங்கரித்துக் கொண்டிருக்கும் பாடசாலையின் இலட்சினையாவேன் என்ன? ஓர் இலச்சினை கதைக்கிறது என்று எண்ணுகிறீர்களா? விக்ரமாதித்தன் கதை என்றால் மட்டும் சலித்துக் கொள்ளாமல் கேட்பீர்கள், வாசிப்பீர்கள் கதை தந்த வ.வே.சு ஐயரை தமிழ்ச் சிறுகதை யின் தந்தையாகவே மகுடம் சூட்டுவீர்கள். ஆனால் இந்தப் பாடசாலை இலச்சினையின் கதையை கேட்க மாட்டீர்களா?

கேளுங்கள், கேட்டுப் பாருங்கள், என்கதையும் தங்களை ஈர்க்கும். நானும் கதை சொல்வேன், என் கதையும் சொல்வேன், என் பிள்ளைகளின் கதையும் சொல்வேன், என் கிராமத்துடன் நான் தொடர் புற்றிருக்கும் முறையையும் அழகுடன் காரணகாரிய அடிப்படையில் அழகுற எடுத்தியம்புவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகா! என்னைப் பற்றிக் கூறிக் கொண்டிருக்கிறேன். என் பிள்ளைகளைப் பற்றிக் கூற வேண்டும். நான் பத்துமாதம் சுமந்து அவர்களை "கண்ணை இமை காப்பது போல்" காத்து பெற்றவள். அதனால் எப்படி அவர்களைப் பற்றிக் கூறாமல் இருக்க முடியும் இக்கிராம மக்களின் சொத்தாகவுள்ள நெற்கதிர், இவ்வுலகையே வாழ வைக்கும் சூரிய பகவான், திறந்த நிலையில் எல்லோருக்கும் அறிவொளி பரப்பிக் கொண்டிருக்கும் புத்தகம், இக்கிராமத்தை இருளிலிருந்து காக்கப் பிரகாசித்துக் கொண்டிருக்கும் விளக்கு, கற்பகதரு என அழைக்கப்படும் பனை, இளநீரை சொரிந்து கொண்டிருக்கும் தென்னை எல்லாவற்றி ற்கும் மேலாக இப்பாடசாலையே நிமிர்ந்து நிற்க வைக்கும் மகுட வாசகம் என்பவர்கள் என் பிள்ளைகளேயாவர்.

இப்போது என் பிள்ளைகள் உங்களுடன் சற்று நேரம் இலாவ கமாகக் கதைப்பார்கள்.

"உழுதுண்டு வாழ்வோர்க்கு ஒப்பில்லைக் - கண்டீர் என்று விவசாயத்தின் பெருமைகளை சுவைபட எடுத்தியம்பி உள்ளார்கள். அவ்விவசாயத்தின் பயனாக விளைந்தவனே நான். நான் தங்களைச் சிந்திக்க விடாமல் என் பெயரை கூறுகின்றேன். நானே நெற்கதிராவேன். இவ் ஞானிமட கிராம மக்கள் என்னைத் தெய்வமாகவே மதிக்கிறார்கள். இலங்கையின் பிரதான உணவாக நெல் அரிசிச் சோறே விளங்கு கின்றது. அதுவும் இம் மண்ணில் விளையும் எனக்கு எவ்வளவு மதிப்பு தெரியுமா? இலங்கையில் மட்டுமல்ல உலக நாடுகளும் கூட என்னைத் தான் விரும்பி வாங்குகிறார்கள். நான் இக்கிராம மக்களின் வயிற்றுப் பசியைப் போக்கி அவர்களுக்குத் தன்னிறைவை அளித்து மீதமுள்ளதை மற்ற நாட்டு மக்களும் உண்கிறார்கள் அதனால் தான் என்னை இப்பாடசாலை இலட்சினையில் ஓர் அங்கமாக சேர்த்தார்கள் போலும்.

" அகவிருள் நீக்கி ஆணவம் அழித்து உயிர்களுக்கெல்லாம் இன்னருள் தரும் இறைவன் போல உலக இருள் நீக்கி இன்பம் கொடுப்பவன்" எனும் பெருமைகளையுடையவள் தான் நான். நான் தான் கோள்களுக்கெல்லாம் தாயாக விளங்கும் சூரியபகவான். நான் இவ்வுலக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் இருள் நீங்கி ஒளியுடனும் பிரகாசத்துடனும் வாழ வழிவகுக்கின்றேன். கடிகாரம் கண்டுப்பிடிக்கப்படாத காலத்திலேயே இக்கிராம மக்கள் என்னை நம்பியே வாழ்ந்தார்கள். நான் எத்திசையில் எப்போது நிற்கின்றேனோ அதனை தங்கள் செயற்பாடுகளை ஆரம்பிக்கும், முடிக்கும் நேரமாக கொண்டுள்ளார்கள். இக்கிராம மக்கள் சந்தோசமாகவும் ஒற்றுமையாகவும் வாழ நானே காரணமாவேன். அவர்களுக்கு நான் அழியா முதலியாக இருந்து எந்நேரத்திலும் காப்பேன்.

"தொட்டனைத்(து) ஊறும் மணற்கேணி மாந்தர்க்கு கற்றனைத்து ஊறும் அறிவு" மணல் கேணியில் தோண்டிய அளவுக்குத்தக்க நீர் ஊறும் அதுபோல மக்களுக்கு அறிவு வளரும் அதற்கு அடிப்படையாக விளங்குபவள் நானே. நான் தான் இப்பாடசாலை இலட்சினையில் திறந்த நிலையில் அறிவூட்ட பிறந்திருக்கும் புத்தகம், இக்கிராம மக்கள் பல்வேறு கதைகளிலும் சாதனையாளர்களாக மாறுவதற்கு அத்திவாரமாக விளங்குகின்றேன். இப்பாடசாலை மாணவர்கள் பல்வேறு வித போட்டி களிலும் வெற்றியீட்டி விருதுகளைப் பெற்றிருக்கிறார்கள். இம் மாணவர் களின் அறிவுப் பசியைப் போக்கி அவர்களை நற்பிரசைகளாக மாற்றுவது நான் தான்.

"கல்வியை கருத்தாய் கற்றிட இருள் அகற்றி ஒளி வழங்கும் விளக்கு" என்று இக் கிராமத்துக்கு ஒளியூட்டிக் கொண்டிருப்பவள். எனக்கு எல்லாப் பாடங்களும் அத்துப்படி கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், தமிழ், கலை போன்ற பல்வேறு துறைகளிலும் நான் நிபுணி. எனக்கு இவையெல்லாம் எப்படி தெரியும் என்று நினைக்கிறீர்களா? மாணவர்கள் என் ஒளியில் இருந்து படிப்பதை கவனித்துக் கொண்டிருப்பேன். என்னதான் நாடு அபிவிருத்தியடைந்து வந்தாலும் எனது கிராமத்திற்கு மின்சார வசதி கிடைக்காதது ஓர் கவலையே, இருந்தாலும் ஓர் சந்தோசம். ஏனென்றால் பிள்ளைகள் என்னில் இருந்து படித்து சித்தியடையும் போது நான் இறுமாப் படைகின்றேன்.

"பலகோடி பயன் தரவே பனைக்குலங்கள் இருக்கின்றோம். பலந்தேடும் மனிதருக்கு பயன்தரவே வாழ்கின்றோம் குலம் வாழக் குடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழக் கிராமத்தின் ஏழைகட்கு நலம் வாழ வேண்டுமெனில் நம்புங்கள் எம் குலத்தை" என நாமே எம் குலத்தின் பெருமையைக் கூறுகின்றோம். என்னை யாரென்று விளங்கிக் கொண்டிருப்பீர்கள் பனந்தொழில்கள் வடக்கு, கிழக்கு மாகாணத்தின் " தங்கச் சுரங்கம்" என அழைக்கப் படுகின்றது. இக்கிராமத்தில் நான் மிகையாகவே வாழுகின்றேன். என் மூலம் இக்கிராம மக்கள் பல நன்மைகளைப் பெறுகிறார்கள். எனக்கு எவரும் நீர் ஊற்றுவதில்லை. பசளை இடுவதில்லை ஆனால் நான் ஞானிமடக்கிராம மக்களுக்கு பனங்கிழங்கு, ஒடியல், பனங்கூழ். பனாட்டு என்பவற்றை இலவசமாகக் கொடுக்கின்றேன். யாழ்ப்பாணம், நவாலியூர் சோமசுந்தரப்புலவர் என் வளத்தை சுவைபட உவமித்துப் பாடியுள்ளார். இக்கிராம மக்கள் என்னிடம் வந்தால் அடிக்கடி கூறுவார்கள் " பனை இருந்தாலும் ஆயிரம் இறந்தாலும் ஆயிரம்" எனும் போது நான் என் மனதிற்குள்ளேயே இறுமாப்படைவேன்.

"தெங்கு தானுண்ட நீரை தலையாலே தான் தருதலால்" என்று புகழுடன் விளங்குபவள் நான். ஞானிமடக் கிராமத்தில் யுத்த நடவடிக்கைகளுக்கு முன் நான் செறிந்து வளர்ந்து எல்லோரது தாகத்தையும் தீர்ப்பேன். ஆனால் தற்சமயம் நான் சற்று குறைந்தள விலேயே காணப்படுகின்றேன். இருந்தாலும் இப்பாடசாலை கிராம நிகழ்வுகள் அனைத்திற்கும் அலங்கரிப்பதற்கு பயன்படுத்துகிறார்கள். என் ஓலைகளை வீடு வேய்வதற்கு பயன்படுத்துகின்றார்கள். இவை எல்லாவற்றையும் நினைக்கும் போது என் மனம் ஆனந்த வெள்ளத்தில் மூழ்கி விடும்.

இவர்கள் எல்லோரையும் விட நானே உயர்ந்தவள். நானே இப்பாடசாலையின் வைரமாக விளங்கும் மகுட வாசகம். " அன்பும் அறிவும் பெறுக" இவ்வாறு எனக்கு பெயர் இட்டவர்களை நான் என் இருகரம் கூப்பி வணங்குகின்றேன். திருவள்ளுவர் பெருமான் திருக் குறளிலே "அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ் ஆர்வலர் புன் கண்ணீர் பூசல் தரும்" என அன்பின் பெருமையை நினைத்து தானே ஆனந்த வெள்ளத்தில் மூழ்குகின்றேன். இப்பாடசாலையின், இக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமத்தின் கல்வி அறிவின் பிரகாசத்திற்கு ஏற்ற வகையில் நானும் அமைந்திருக்கிறேன்.

என் பிள்ளைகளுடன் நீங்கள் கதைத்து விட்டீர்களா? அவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு திறமையை கொண்டிருப்பதை அறிந்திருப் பீர்களே. என் பிள்ளைகளும் என்னைப் போல் பேசுவதில் புலிகள். நான் இக்கிராமத்துடன் பின்னிப் பிணைந்துள்ளதை உங்களுக்கு சுவைபட கூறியுள்ளேன். இப்பாடசாலையின் இலட்சினையாக இருப் பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். பூநகரி கோட்ட பாடசாலைகளின் இலச்சி னைக்குள்ளேயே நான்தான் அழகானவள் என நினைக்கிறேன்.

இன்று இப்பாடசாலை தனது 64 வது அகவையை கொண்டாடு கின்றது. இதனை இட்டு பள்ளிக்கு வாழ்த்துக்களை வாரி வழங்கு கின்றேன். இனிவரும் காலங்களிலும் இப் பாடசாலையின் இலட்சினை யாகவே இருக்க விரும்புகிறேன். எல்லோரும் ஒற்றுமையுடன் இறைவன் அருட்கடாட்சம் கிட்டி மேலும் வளர வேண்டும் எனக்கூறி வாழ்க வளமுடன் வாழ்க என வாழ்த்துகிறேன்.

"குஞ்சி அழகும் கொடுத்தானை கோட்டழகும்" என்ற பாடல் போல் எனக்கு தலைமுடி இல்லை, மஞ்சள் பூசுவதில்லை, சேலை உடுப் பதில்லை இவ்வளவற்றையும் இப்பாடசாலையின் இலட்சனையாக இருந்து சொல்வதற்கு பாக்கியம் கிடைத்திருக்கிறதே இதுவே நான் செய்த புண்ணியம்.

நான் தான் கிளி/ஞானிமடம் அ.த.க பாடசாலையின் இலட்சினை ஆவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முயற்சி திருவினையாக்கும்



பா.குயிலினி
தரம் -11
வலயமட்ட தமிழ்த்தினப் போட்டியில்
இரண்டாம் இடம் பெற்ற சிறுகதை

காற்றுப்பலமாக வீசிக் கொண்டிருந்தது. மேகங்களெல்லாம் திரண்டன. இடிஇடித்தது கமலா தன் மகனைக் காணவில்லை என்று ஏக்கத்தில் நின்ற தாய் சரத்தைக் கண்டதும் கட்டி அரவணைத்தாள். இவ்வளவு நேரமும் என்ன செய்தாய் மகனே என்றாள் தாய், நண்பர் களுடன் விளையாடிக் கொண்டிருந்ததில் நேரமாகியதே தெரியவில்லை அம்மா என்று கூறினான். சரத்தின் தந்தையோ விவசாயி சரத் சிறுவயதிலிருந்தே கஷ்டத்தை உணர்ந்தவன். வறுமையென்றாலும் கல்வியில் முதன் நிலையிலே நிற்பான். எந்த போட்டிக்குச் சென்றாலும் வெற்றியுடனே வருவான். அவனுக்கு கல்வியில் தோல்வியென்பதே தெரியாது. ஆனால் இவன் நண்பனோ பணக்கார குடும்பப் பையன். தாய் தந்தையரை மதிக்கும் பண்பில்லாதவன் கல்வியில் சற்று கீழ்நிலையிலே காணப்படுவான்.

ஒரு நாள் பாடசாலை செல்லும் போது இருவரும் கதைத்துக் கொண்டே சென்றனர். அப்பொழுது நண்பன் விவேக்கிற்கு கடற்கரை சென்ற ஞாபகம் நினைவுக்கு வந்தது. டேய் சரத், நான் நேற்று நண்பர் களுடன் கடற்கரைக்குச் சென்றேன். அது மட்டுமா வீட்டில் அம்மாவிடம் ஐயாயிரம் ரூபாய் பணம் கேட்டதும் தரமறுத்தார் நான் மௌனமாகவும், சாப்பிடாமலும் இருந்தேன். உடனே பணம் தந்து விட்டார். நண்பர்களுடன் சந்தோசமாகச் சென்றேன். ஐயாயிரம் ரூபாயா ஏன் இப்படி அதிகமாக செலவளிக்கின்றாய். ஏன் பெற்றோருடன் இப்படி நடந்து கொள்கிறாய். இதெல்லாம் தப்பான வழிக்கே கொண்டு செல்லுமென சரத்கூறினான். இதையெல்லாம் அலட்சியமாக கேட்ட விவேக், வெறும் ஐயாயிரம் ரூபாய் தானே என்றான். வீணாக செலவளிக்கும் பணத்தை உன் படிப்புக்கு செலவளிக்கலாமே என்று சரத் கேட்ட போது, படிப்பிற்காக படித்து பின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலை செய்து பணம் சம்பாதிக்கிறார்கள். அந்தப் பணம் படித்து வேலைக்கு செல்லும் முன்பே என்னுடன் உள்ளது. பிறகெதற்குப் படிப்பு என்று கூறினான். வசதியானவர்கள் எதையும் யோசிக்கமாட்டார்கள் ஒரு பிரச்சனை வரும்போது தான் அதைப் புரிந்து கொள்வார்கள் என சரத் மனதில் நினைத்துக் கொண்டு மௌனமாக நடந்தான். பின் இருவரும் வீடு சென்றனர். சரத் வீட்டுக்கு சென்று கவலையுடன் இருந்தான் . ஏன் சோகமாய் இருக்கிறாய் என்று தாய் கேட்டார். அப்போது, விவேக் கூறிய வார்த்தைகளைக் தாயிடம் கூறினான். மகனின் மனநிலையை அறிந்து கொண்டாள். தன் மகனின் ஆசைக்காகவும் நன்றாக படிப்பிக்க வேண்டும் என்னும் நோக்கத்துடனும் அதிகமாக முயற்சி செய்து கடன் பட்டு வெளிநாடு சென்றாள்.

தாய் வெளிநாடு சென்றதிலிருந்து தந்தையின் அரவணைப்பில் வாழ்ந்து வந்தான் சரத், திடீரென ஒரு நாள் சரத் தோட்டத்திற்குச் சென்று மரங்களுக்குத் தண்ணீர் ஊற்றிக் கொண்டிருந்தான். அப்போது அங்கு வந்த அப்பா இந்த முருங்கை மரம் பட்டுப் போச்சு வெட்டிடலாமா என்று கேட்டார் வேண்டாமப்பா இன்னும் கொஞ்ச நாள் பார்க்கலாம். மறுபடியும் துளிர்க்குமென்று எனக்கு நம்பிக்கை இருக்கு என்று கூறினான். சில நாட்களுக்கு பின்பு சரத் பாடசாலையால் சென்று தோட்டத்துக்குச் சென்றான். சென்றதும் அப்பா அப்பா சீக்கிரம் வாங்க எனக்கூறினான் பதறியபடி ஓடி வந்தார் தந்தை. இங்கு பாருங்க.........இதோ முருங்கை மரத்தில் துளிர் விட்டிருக்கப்பா என்றான். மகிழ்ச்சியுடன் சரத் பின்னர் கணிதப் போட்டிக்காக வீடு சென்று படித்துக் கொண்டிருந்தான். விடிந்ததும் போட்டிக்கு வெளிக்கிட்டு சென்றான். மாலை வீடு வந்ததும' சோகத்துடன் இருந்தான். ஏன் சோகத்துடன் இருக்கிறாய் போட்டி எப்படி இருந்தது என தந்தை கேட்டார். அப்பா மூன்றாம் நிலை கூட கிடைக்க வில்லை. என்று கவலையுடன் கூறினான். பின்பு எனக்கு படிக்க விருப்ப மில்லாமல் இருக்கு எனக்கு போட்டியிலையெல்லாம் இனிக் கிடைக்காது போல இருக்கு படிப்பென்றாலே வெறுப்பாக இருக்கு, நான் விவேக் போல இருக்கப் போறேன் எனக்கூறிவிட்டு அறைக்குள் சென்றான். அன்றி லிருந்து சரத்தின் படிப்பு குன்றிக் கொண்டே போனது இதனை அறிந்த தந்தை மனவருத்தத்துடன் மகனை அழைத்து, மகனே நீ ஏன் இப்படி துவண்டு போகிறாய். அந்த முருங்கைக்கு நம்பிக்கை வைத்ததைப்போல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிப்பிலும் நம்பிக்கை வை. உன்னை நல்ல வழியில் வளர்க்க வேண்டும். நீ படித்து நல்ல நிலையை அடைய வெண்டுமென்று தானே! உன் தாய் வெளிநாட்டில் உழைத்து கொண்டிருக்கிறாள் மறந்துவிட்டாயா? என பல அறிவுரை கூறினார். ஆனால் அவனோ தந்தை கூறிய வார்த்தைகளை கேட்காமல் படிப்பில் அலட்சிய மாகவே நடந்து கொண்டான்.

அன்றொருநாள் பாடசாலையில் ஆசிரியர் ஒருவர் அழைத்து ஏன் இப்படிப் படிப்பில் கவனம் இல்லாமல் திரியிறாய் காரணம் என்னவென்று கேட்டு பல அறிவுரைகளைக் கூறினார். அப்பொழுது தான் சரத் தனது தோல்வியிலிருந்து எழுந்தான். அந்த முருங்கை மரத்தைப் போல விடாமுயற்சி செய்து படித்து ஒரு இலட்சியத்தை அடைய வேண்டுமென உறுதி செய்தான் ஆனால் இவன் நண்பன் தகாத நடத்தைகளில் ஈடுபடுகிறான் என அறிந்து கவலை அடைந்தான் சரத் சாதரண தரப்பரீட்சை, உயர்தரப்பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று விஞ்ஞான பீடத்தில் கற்றுக் கொண்டிருந்தான். பின்னர் ஒரு வைத்தியராக தனது கிராமத்தில் காலடி வைத்தான். முதலில் தனக்காக தன்னையே அர்ப்பணித்து வேலை செய்து கொண்டிருக்கும் தன் தாயை வெளிநாட்டிலிருந்து அழைத்தான். பின்னர் தான் கற்ற பாட சாலைக்குச் செல்கின்றான். அங்கிருந்த மாணவர்கள் எப்படி உங்களால் வைத்தி யராக வர முடிந்தது எனக் கேட்ட போது, சரத் பெற்றோர், ஆசான்களின் அறிவுரையும் நான் எடுத்த முயற்சியும் தான் காரண மெனக் கூறினான்.

மறுநாள் நண்பன் வீட்டிற்குச் செல்கிறான். அங்கு நண்பன் மதுபோதைக்கு அடிமையாகி புற்று நோயால் தவிப்பதைக் கண்டு மனவருத்தம் அடைந்தான விவேக், சரத்தைக் கண்டதும் உன் வார்த்தை கேட்காமல் கெட்டுப்போனேன் எனக்கூறி கதறி அழுகிறான். சரத் தன் நண்பனின் நோயை எதுவிதக் கட்டுப்பணம் இன்றி தானே குணப் படுத்துவன் என்றான். பின்பு இனியாவது பெற்றோரை மதித்து முயற்சி செய்து நாட்டில் ஒரு நல்ல பிரஜையாக வாழ் எனக் கூறினான். விவேக்கிற்கு வந்த நிலை இனியாருக்கும் வரக்கூடாது என எண்ணி தனது முருங்கை மரத்தின் கதையையும் நண்பனின் நிலையையும் தொகுத்து ஒரு நாவலாக வெளிவிடுகிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மா (கவிதை)



ச.டிலானி
தரம் – 06

அம்மா என்னம்மா
அன்பின் சிகரமம்மா
ஆசை தீர ஆசி
சொல்லும் தாயம்மா

பூவாய் சிந்துமம்மா
புன்னகைத்தால் தேனம்மா
பாக்கியத்தில் நானும்
உந்தன் சேயம்மா
என்னை ஈன்று எடுத்தாய்
இன்பமாய் பேரும் வைத்தாய்
தேனாய் அழைத்திட்டாய்
தெய்வமே நீயம்மா

பசியென அழுகையில்
பாலும் கொடுத்தாய்
பள்ளி செல்லுமெனைப்
பார்த்து இரசித்தாய்
உன்னைப் போல் தெய்வம்
உண்டோ சொல்
உன்மடியில் மகிமைக்கு
உண்டம்மா நூறு வீதம்
பாதுகாப்பு

ஊரார் முன் - என்
பெருமை பேசினாய்
ஊட்டி விட்டு மிச்சமதனை
நீயும் உண்டாய்
அன்னை உன் பணியினை
பாராட்டுவேன்
என்னை உன்
பணியாளனாய் சீராட்டுவேன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பள்ளி வாழ்வு



ந.நிதர்சனா
தரம் - 02

துள்ளித் திரிந்த வயதினில்
தாயின் கை கோர்த்து வந்தேன்
ஆசான் என் கை கோர்த்திட
பாடசாலையெனும் நந்தவனத்தின் ரோஜாக்களாக

துளிர் விட்டெழுந்தேன் - இங்கு
பேனா முனை தொட்டுப் பேசிய
வெட்டிப் பேச்சுக்கள் வரை
பள்ளி நாட்களில் மறக்க முடியாத நினைவுகள்

கற்றுக் கொண்ட பாடங்கள்
தட்டிக் கொண்ட வெற்றிகள்
அன்னை முகத்தின் ஆனந்த ரேகைகள்
ஆசானின் எண்ணத்தில் பெருமித அலைகள்

மாணவர் மனங்களில் அடித்தளமாய் வித்திட்ட
நட்பின் கொண்டாட்டங்கள்
அத்தனையும் எம் மனதின்
மறவாத கோலங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைப்பதொன்று......



ஜெ. தர்மிகா
தரம் - 11

அந்தச் சம்பவம் நடந்து மூன்று ஆண்டுகள் அப்போது என் அப்பா புத்தளத்தில் கடமையாற்றிக் கொண்டிருந்தார். தாமிரபரணி யில் அப்பாவும் அம்மாவும் நானும் சகோதரர்களும் வாழ்ந்த பகுதியின் பெயர் அது தான். அங்கேயுள்ள றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தில் என் ஆரம்ப படிப்புக்காக என் தந்தை அங்கே என்னைச் சேர்ந்தார்.

அரசாங்கத்தில் அப்பா ஒரு கிராமசேவக உத்தியோகத்தர் எமக்கு அரசாங்க அலுவலக விடுதியில் அழகான வீடு, அங்கே சகல வசதியும் கிடைத்தது. கேட்பதைதெல்லாம் வாங்கித் தரும் வசதி அப்பாவுக்கு இருந்தது. என் வகுப்பு மாணவர்களில் கனிஸ்ரா ஒரு சகமாணவி அதே ஊரில் மீனவக்குடும்பத்தில் பிறந்தவள். பாவம் மிக ஏழை! படிப்பில் மிகக் கெட்டிக்காரி என்று சொல்ல முடியாவிட்டாலும் பண்புடன் நடக்கும் ஒரு ஒழுக்கமான மாணவி பார்த்தவர்களை பரிதாபப்பட வைக்கும் அவள் மெலிந்த உருவம், சோகம் தெரியும் அவள் தோற்றத்திலும் தன் குடும்ப சூழலை யாருக்கும் சொல்லமாட்டாள் தன் உணர்வுகளை ஆதங் கங்களை தனக்குள்ளே அடக்கி குமையும் பண்பு கொண்டவள். அவள் அறியாமலே தன் குடும்பத்தின் வறுமை நிலையை எண்ணி தன்னை அறியாமலே சில வேளையில் கண்களில் கண்ணீர் வழிந்தோடும் காட்சியையும் காண்பேன்.

எங்களுடைய வகுப்பிற்கு தினமும் நான்கு ஆண் ஆசிரியர் களும் இரண்டு பெண் ஆசிரியர்களும் வருவார்கள். அவர்களில் நான்கு ஆண் ஆசிரியர்களும் ஊரைச் சேர்ந்தவர்கள். ஆனால் அவர்களில் ஒருவரான ஐந்தாவது ஆசிரியர் தான் கனிஸ்ரா மீது மிகவும் கருணை காட்டுபவர். அவர் நீர்கொழும்பைச் சேர்ந்தவர். அவர் ஒரு நல்ல ஆசிரியர் தமிழில் மிகவும் பாண்டித்தியம் பெற்றவர். கவிதை எழுதுவார் மிகவும் இனிமையாகப் பாடுவார். அவர் ஒரு நாள் எங்கள் வகுப்புக்கு வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னோடு அன்பாகக் பழகுவார். ஒருநாள் என்னை ஆசை யோடு அழைத்தார். அவருடைய கண்கள் சுற்றிச்சுழன்று பார்த்தன. அவர் பார்வை கனிஸ்ராவின் மேல்பட்டது. அவளை தன்னருகில் கூப்பிட்டார். இங்கே வாருங்கள் என கனிஸ்ராவை அழைத்தார். வார்ந்து முடிந்து கட்டாத தன் சிறிய கூந்தலைத் தடவிக் கொண்டே அழுக்கான உடை களையும் கையால் சீவிக்கொண்டாள் கனிஸ்ரா அவருடைய அருகில் வந்து கூனிக் கொண்டு நின்றாள்.

சோகம் நிறைந்த அவள் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்த ஆசிரியர் கதைகொடுத்து குறைகளைக் கேட்டு அறிந்து கொள்ள முடியாத நிலையிலும் அவர் அவளுடைய மனதில் உள்ள பாரத்தை குறைக்க விரும்புகிறார். யாருடனும் கலகலப்பாக சிரித்தறியாத அவளின் முகத்தில் சோகமும் பயமும் கலந்திருந்தது.

கனிஸ்ரா ஏன் தலை இழுக்கவில்லை என்று அவர் வினாவினார் எண்ணெய் இல்லையா வீட்டில் என்ன இந்தப் பெரிய நகம் அதனை வெட்டி சுத்தமாக வைத்திருக்கலாமே கனிஸ்ராவை ஆசிரியர் கேள்வி களை கேட்டார். ஆனால் அவள் மௌனமாக இருக்கிறாள். அவர் தொடர்ந்து அவளைக் கேள்வி கேட்டுக் கொண்டிருக்கிறார். கனிஸ்ரா உங்களுடைய அப்பா என்ன தொழில் அப்பாவுக்கு தொழில் எதுவும் செய்ய முடியாது என்கிறாள். கனிஸ்ரா அவள் விடை சொல்லி முடிக்கும் முன் “உங்களுடைய அம்மா உங்களைக் கவனிக்கிறதில்லையா என அவர் கேட்டார்.

கனிஸ்ராவின் நினைவுகளை கிளறி அவள் மறந்திருந்த அந்த சோகங்களையும் அவலங்களையும் அறிந்து உதவி செய்ய வேண்டும் என நினைத்தார் கனிஸ்ராவின் கண்களிலிருந்து கண்ணீர் முத்துக்கள் உதிர்ந்து கொண்டு இருந்தன அவற்றையெல்லாம் அவதானித்துக் கொண்டிருந்த எனக்குப் பொறுக்கமுடியவில்லை. நான் கனிஸ்ராவை அறிந்தளவில் மட்டும் தெரிந்த விடயங்களை ஆசிரியருக்கு கூறினேன். அவளுடைய தந்தை மனநிலை சுகமில்லாதவர் தாய்க்கு ஒரு கால் இயலாது எனக் கூறினேன். அதனை அறிந்த ஆசிரியர் பெரும் சோகத்தில் ஆழந்துவிட்டார். அவளிடம் கேட்டார் உங்கள் வீட்டிற்கு வருவேன் என்று கூறி அவளை அவள் இருந்த இடத்திற்கு அனுப்பினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் தன் மகளின் பிறந்தநாள் விழாவை நடாத்துவதற்கு திடீர்ப் பயணம் செல்ல வேண்டி ஏற்பட்டது. பாடசாலை நேரத்திலிருந்து ஏதோ ஒன்றை இழந்தது போல் அவரது மனம் நிம்மதியின்றி அலைகின்றது.

பரந்தாமன் ஆசிரியருடைய மனதில் அவளின் கஷ்ட நிலை தான் தெரிகிறது தனது பையை ஒரு மூலையில் போட்டு விட்டு கனிஸ்ரா விற்கு உதவி செய்யவேண்டும். தான் போய்வந்து என நினைத்துக் கொண்டு செல்கின்றார். தன் வீட்டிற்கு சென்று எல்லா வேலைகளையும் முடித்துவிட்டு வந்த அவருக்கு ஒரு அதிர்ச்சியான சோகமான ஒரு செய்தி கிடைத்தது அவர் மனக் கோட்டைகள் எல்லாம் சரிந்து விழுந்தன.

அவளை நன்றாக படிக்க வைக்க வேண்டும் எனப்பலவற்றை மனதில் நினைத்திருந்தார்.

கனிஸ்ரா பாடசாலைக்'கு மூன்று நாள் வரவில்லை. இரத்த வாந்தியுனும் காய்ச்சலுடனும் வருந்திக் கொண்டிருந்த அவள். இறைவனிடம் சேர்ந்து விட்டார் என ஒரு ஆசிரியர் அழுகைக் குரலுடன் கூறினார். எல்லோருடைய மனதிலும் சோகம் எழுந்தது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை மாணவியின் குமுறல்



ஜெ.கிருசாந்தினி
தரம் - 08

ஆசானே!
விடியலை நோக்கும்
எனது பயணங்கள்
தடைப்பட்டுக் கிடக்கின்றன
என் கனவுப் பாதைகள்
நனவாகாமல்
தடைப்பட்டுக் கிடக்கின்றன
நானும் தடம் பதித்திடுவேனா?

ஆசானே!
என் அப்பியாசக் கொப்பிகள்
வெள்ளைக் காகிதங்களாய்
வெறுமையாக உள்ளன
எனது கனவுகள்
எனக்குச் சுமையாய்
மாறிப் போய் விட்டன
மாற்றங்கள் நேர்ந்திடுமா?

ஆசானே
என் கண்களில்
இருண்ட மேகம்
இன்னும் கரைந்தோடவில்லை
காலத்தின் கோலத்தால்
எனது கனவுகள் கலைந்து விட்டன
தடம் மாறிய பயணங்களில்
எனது தடயங்கள்
எங்ஙனம் விடிந்திருக்கும்
தடம் பதிக்கும்
எனது பேனை முனைகள்
தடம் மாறிப் போய் விட்டன

ஆசானே!
ஆவலாய் உன்னிடம்
ஒரு வேண்டுகோள்
யாசகம் கேட்கிறேன்
பிச்சையிடுங்கள்

ஆசானே!
அட்சய பாத்திரத்தில்
நீ பிச்சையிடுகிறாய்
பிச்சையிடுங்கள்
மிகவும் பசிக்கிறது
பிச்சையிடுங்கள்

ஆசானே!
நான் தீட்டும் ஓவியத்திற்கு
வர்ணங்களைப்
பிச்சையிடுங்கள்
என்னுடைய
முகவரியை
பிச்சையிடுங்கள்

என்னுடைய
கண்களுக்கு
உன்னுடைய
ஒளியைப்
பிச்சையிடுங்கள்
அறிவொளி வீசும்
ஞான விளக்குகளே
எமக்கொரு விடியலைத்
தாருங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுகதைகள்



க.கனியமுதன்
தரம் - 03

01. கையில் தவழும் பையில் உறங்கும் அது என்ன?

பணத்தாள்

02. உச்சிமேலே கிரீடம் உடம்பெல்லாம் கண் அது என்ன?

அன்னாசி

03. தங்கை தலையிலே பாம்பு அது என்ன?

பின்னல்

04. புகைப்படக்கருவி இன்றி படம் எடுப்பவர் அவர் யார்?

நாகபாம்பு

05. பட்டுன்னு போட்டா பளிச்சின்னு எரியும் அது என்ன?

மின்சார விளக்கு

06. ஊசி நுழையாத கிணற்றில் ஒரு படி தண்ணீர் அது என்ன?

இளநீர்

07. இந்தியா சிவப்பு இலங்கை கறுப்பு அது என்ன?

குண்டுமணி

08. போட முடியும் ஆனால் எடுக்க முடியாது அது என்ன?

கோலம்

09. எனது தலையை நானே விழுங்குவேன் நான் யார்?

ஆமை, நத்தை

10. சித்திரப்பின்னல் கோட்டைக்குள் போக வழியுண்டு வர வழியில்லை அது என்ன?

எலிப்பொறி

11. கொதிக்கும் கிணற்றில் குதிப்பான் கூச்சல் இல்லாமல் குளிப்பான் அவன் யார்?

அகப்பை

12. குளித்தால் இறந்து விடுவான் அவன் யார்?

நெருப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோள்கள் பற்றிய தகவல்கள்



கி.ரிஜீபன்
தரம் - 07

01. ஞாயிற்றுத் தொகுதியில் உள்ள கோள்கள் :- புதன், வெள்ளி, புவி, செவ்வாய், வியாழன், சனி, யுரேனஸ், நெப்டியூன்
02. வெறுங்கண்ணால் பார்க்கக்கூடிய கோள்கள் :- புதன், வெள்ளி, வியாழன், சனி, செவ்வாய்
03. பூமி தோன்றியது :- 450 கோடி ஆண்டுகளுக்கு முன்
04. பூமியின் எடை :- 600 மில்லியன் தொன்
05. பூமியின் விட்டம் :- 12756. 3km
06. பால் மண்டலத்தின் வயது: - 12 000 - 14000 ஆண்டுகள்
07. தொலைவில் உள்ள கோள், எதிர்ப்பக்கமாகச் சுற்றும் கோள் :- யுரேனஸ்
08. யூன் முழுவதும் சூரிய வெளிச்சம் உள்ள நாடு :- ஐஸ்லாந்து
09. பெரிய கறுப்பு வட்டமுடைய கோள், சூரிய ஒளியை மிக அதிகமாகப் பெறும் கோள், நீல நிறத்தில் காணப்படும் கோள் :- நெப்ரியூன்
10. புவி மேற்பரப்பின் பரப்பளவு :- 50 மில்லியன் சதுர km
11. நீண்ட பகல், குறுகிய இரவு : - யூன் 21
12. சூரிய ஒளி பூமியை அடைய எடுக்கும் நேரம் :- $8\frac{1}{2}$ நிமிடங்கள்
13. புதிய நட்சத்திரங்கள் தோன்றும் இடத்தின் பெயர் :- Orion Nabula
14. மே,யூன், யூலை முழுவதும் பகலாக இருக்கும் நாடு :- நோர்வே
15. பூமியில் இரவும் பகலும் சமமாகவுள்ள பிரதேசம் :- ஆர்டிக் பிரதேசம்
16. உலகின் முதலாவது தகவல் தொடர்பு செயற்கை கோள்:- டெல்ஸ்நார் (அமெரிக்கா)
17. மிகப்பெரிய நட்சத்திரத்தின் பெயர் :- IRS 5
18. விண்கலங்களை விண்ணுக்கு அனுப்பும் இடம் :- Cosmodrome
19. பூமியதிர்ச்சிக்கான காரணம் :- ரெக்ரோனிசம்
20. நிலவில் காலடி வைத்த நீல ஆம்ஸ்ரோங் முதலில் நிலவில் வைத்த கால் :- இடது கால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணிதப் பொது அறிவு



வ.விந்தன்
தரம் - 06

01. முதல் 10 இயற்கை எண்களின் சராசரி - 5.5
02. வடிவியலின் அடிப்படைக் கருத்து - புள்ளி
03. ஒரு தளத்தில் அமைக்க இயலாத வடிவியல் உருவம் - ஐங்கோணம்
04. வடிவியலின் தந்தை - ரிண்ட பாப்பிதரஸ்
05. திட்ட சாரா அளவு - தப்படி
06. 2006 ஆம் ஆண்டுக் கணிதம் கருத்துப் பரிமாற்றம் மாதிரியை உருவாக்கியவர் - லிம்
07. "கணிதமே கடவுள்" எனக் கூறியவர் - வினோபா பாவே
08. முதன் முதலில் பூஜ்ஜியத்தை அறிமுகப்படுத்தியவர்கள் - இந்தியர்கள்
09. கொள்ளளவின் திட்ட அலகு - லீற்றர்
10. மிகச்சிறிய 4 இலக்க எண் - 1000





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகைத்தலினால் ஏற்படும் தீங்கு (சிறு சோதனை)



ந.தர்சிகா
தரம் - 10

ஊரூராய் சுற்றி உடலை வருத்தி
உழைத்து களைத்துக - மனிதா
உன்னுடன் பேச எனக்கோர் உரிமை கொடு
புகைத்தலினால் பூமி அழிகிறது புரிந்துகொள்
அதில் உன் பங்கு தான் அதிகமானது
அழிப்பதற்கு ஆணிவேராய் துடிக்கிறது உன் இதயம்

ஆ.....அழகாகத் தான் புகைப்பிடிக்கிறாய் - ஐயகோ
ஆழகான உன் உடலை அல்லவா அழித்தொழிக்கிறாய்
இதில் உள்ளவர்கள் விரும்புகிறார்களா?
இல்லை வெறுக்கிறார்களா?
பட்டியலிட்டுப் பார்
பதினைந்து நாட்களுக்குள் உன்
பெறுபேறுகள் வெளியாகும்

நாட்டு நடப்பென்றும் நாகரீகமென்றும்
கூட்டு முயற்சியால் குதூகலிக்கும் எம் குடும்பத்தை
காட்டு மிராண்டிகள் என்று
கௌரவிக்க மனம் துடிக்கிறது

அடடா அப்பட்டத்தைத் தானே
அன்றொரு நாள் - நீ பெற்று விட்டாய்
உரிமையோடு உன்னிடம் அன்பாக கேட்கிறேன்
இப்போது 09 வயது பிள்ளைக்கும்
பல விடயமும் தெரியும்
இருந்தும் ஏன் ஐயா
இப்படி நடக்கிறாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூளையைப் பலப்படுத்தும் உணவுப் பொருட்கள்



ச.சரண்ராஜ்
தரம் - 07

- நாம் அன்றாடம் எடுத்துக்கொள்ளும் உணவில் தான் சிறந்த உடல் நலத்தை பெறமுடியும். அப்படியானால் எந்த வகையான உணவைத் தினமும் எடுத்துக் கொள்ளலாம், மாணவர்களின் மூளை அன்றாடம் பலவிதமான வேலைகளைச் செய்கின்றது. பல்வேறு பிரச்சினைகளைத் தீர்ப்பதில் கற்றல், படித்தல், தேடுதல் என்று பல உயரி இரசாயன செய்முறைகளைச் செய்து வருகின்றது. இந்தப் பணிகளைத் தொடர்ச்சி யாக செய்வதற்கு மூளையின் செல்கள் ஆரோக்கியமாக இருப்பது அவசியம்.
- ஆரோக்கியமான உணவுகளை உட்கொள்வதன் மூலம் மூளைக்குச் செல்லும் நரம்புகள் சுறுசுறுப்பாக இயங்குகின்றன. மாணவர்கள் வகுப்பறையில் முழு ஈடுபாட்டுடன் இயங்குவதோடு இலக்குகளை சுலபமாக அடைய உறுதுணையாக உள்ளது. ஊட்டச்சத்து அதிகமுள்ள பலவகை உணவுப் பொருட்கள் மூளை இயக்கத்துக்கும், செயற்பாட்டிற்கும் உதவி புரிகின்றன.
- நார்ச்சத்து நிறைந்த ஓட்ஸ், பழுப்பு அரிசி, கோதுமை, ரொட்டி மற்றும் தானியங்களும் உணவில் சேர்த்துக் கொள்ளலாம்.
- ஓமேகா 3 என்ற கொழும்பு அமிலங்களை எடுத்துக் கொள்வது மூளையி லுள்ள செல்கள் ஆரோக்கியமாகப் பணிபுரிய உதவுகின்றன.
- கறுப்பு திராட்சையில் அண்டி அக்ஸிடன்ட் அதிகமாக உள்ளதால் ஞாபக சக்தியை அதிகரிக்கின்றது.
- விதைகள் (Nuts) போன்ற உணவு வகைகளில் விற்றமின் அதிகம் உள்ளது. இதைத்தினமும் உணவில் சேரத்துக் கொளள்லாம்.
- கீரை வகைகளில் உயர்தர மக்னீசியம், பொற்றாசியம் அதிகம் உள்ளன. இது மூளையை வலுவடையச் செய்கின்றது.
- ஒரு நாளைக்கு குறைந்த பட்சம் 2லீற்றர் தண்ணீர் எடுத்துக் கொள்வது நல்லது.
- விற்றமின் $B_6$, விற்றமின் $B_{12}$, கல்சியம், மக்னீசியம், பொற்றாசியம் போன்ற சத்துக்கள் பாலில் அதிகமுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒழுக்கம் விழுப்பம் தரும்



ஜெ. தர்மினி
தரம் - 08

"ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்" என்பது வள்ளுவர் வாக்கு. ஒருவனது வாழ்வின் உயர்வை அவனது வாழ்வின் வெற்றி தோல்வியை ஒழுக்கமும் நிர்ணயம் செய்கின்றது. சீரிய வாழ்விற்குச் சிகரமாக அமைவது சிறந்த ஒழுக்கமேயாகும் என்றால் அது மிகையல்ல. இதனாலேயே "ஒல்காப் புகழ்மிகு தொல்காப்பியமும் உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே" என்றார்.

ஒருவனிடம் எத்தனை செல்வங்கள் இருந்தாலும் அவனிடம் ஒழுக்கம் இல்லையென்றால் உயர்வும் சிறப்பும் இல்லாமல் போகிறது. மனிதன் மனிதனாக வாழ்வதே தலைசிறந்த ஒழுக்கம். இதனை நாம் உள்ளத்தில் நன்கு பதித்துக் கொள்ள வேண்டும். பல்வேறு திறமை களைக் காட்டிலும் பல்வேறு பதவிகளைக் காட்டிலும் ஒருவனுக்கு ஒழுக்கமே சிறந்ததாக வேண்டப்படுகிறது.

உலகம் மதித்துப் போற்றும் வகையில் நாம் வாழ வேண்டும். மற்றவர்கள் பார்த்துப் பழிக்கும் வகையில் நம் வாழ்வு அமையக் கூடாது. இறந்தும் நாம் வாழ வேண்டுமாயின் இருக்கும் போதே மேன்மையான வாழ்வை வாழ வேண்டும். இறந்தும் வாழ்வதே நம் வாழ்வின் இலட்சிய மாக அமைய வேண்டும். அந்த மேன்மை ஒழுக்கத்தின் வழியாகவே வரும். இதனையே வள்ளுவரும் ஒழுக்கத்தில் எய்துவர் மேன்மை எனக் குறிப்பட்டுள்ளார்.

பொருளீட்டுவது வாழ்வின் நோக்கமாயினும் அதன் மூலம் புகழீட்டுவதே நமது குறிக்கோளாக இருத்தல் வேண்டும். பொருள் வழியே புகழ் வரவேண்டுமாயின் ஒழுக்கத்தை உயிரினும் மேலாக நாம் மதித்துப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேண வேண்டும். ஒழுக்கத்தை உயிர் போலக் கருதி காப்பாற்ற முனைய வேண்டும். இத்தகையோரையே வள்ளுவர் "ஒழுக்கத்தின் ஒல்கா உரவோர்" என்றார்.

ஒழுக்கமுடையோர் நிச்சயம் உயர்வடைவர் நீ எதை மதிக்கிறாயோ அது உன்னை மதிக்கும் என்பது பழமொழி ஒழுக்கத்தை உயிராக உயர்வாக மதிப்போருக்கு ஒழுக்கம் உயர்வு தரும் என்பது திண்ணம் 'நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம் என்றும் இடும்பை தரும் என்பது வள்ளுவர் வாக்கு தீயொழுக்கம் என்றும் துன்பத்தையே தரும் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது ஒழுக்கம் இல்லாதோர் தலையின் இழிந்த மயிரனையர் ஆகிவிடுவார். எனவே சமூக அந்தஸ்தைப் பெற மனிதனுக்கு ஒழுக்கம் உயிர் போன்றது என்பதை நாம் உணர வேண்டும்.

ஒழுக்கத்தில் உயர்ந்தோர் பலர். புத்தர், இயேசு, காந்தி போன்றோரின் வரலாற்றை நாம் புரட்டிப் பார்ப்போமானால் அவர்கள் ஒழுக்கத்தில் உயர்ந்து நிற்பதைக் காணலாம். நீங்கள் கீதைச் சுலோகங்களை மனப்பாடம் செய்வதால் மட்டும் மகிழ்ந்து விட மாட்டேன். வரலாறு, கணிதம், சமஸ்கிருதம் முதலியவற்றை பயின்றாலும் பயிலாவிட்டாலும் எனக்கு கவலை இல்லை. ஆனால் முக்கியமாக ஒழுக்கம் பயில வேண்டும் என மாணவர்களுக்கு உபதேசித்தார் காந்தியடிகள் அவர் ஒழுக்கத்தை உயிரினும் மேலாக பேணிக் காப்பாற்றியதின் மூலமே உலகத்தோ ரால் மகாத்மா எனப் போற்றப்படுகிறார். ஒவ்வொரு துறையிலும் உயர்ந்து விளங்கும் உத்தமர்களின் வாழ்வை வரலாறுகளை பார்ப்போமாயின் அவர்களின் உயர்வுக்கு ஒழுக்கமே அடிப்படையாக இருந்தமையை நாம் உணரலாம்.

சுருங்கக் கூறின் ஒழுக்கத்தைப் பேணுவோர் உயர்வர். அல்லாதோர் பழியெய்தி வாழ்வில் சோகம் உண்டாகும். இந்த உண்மையை எந்நாளும் நிலையிற் கொண்டு வாழ்வோமாயின் நமது வாழ்வு வளம் பெறும் என்பதில் ஐயமில்லை.

ஒழுக்கம் பேணி உயர்வடைவோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழந்துணி (சிறுகதை)



வ.அஸ்வினி
தரம் - 08

நான் இப்பொழுது பழந்துணியாக குப்பை மேட்டிலே கிடக்கிறேன். என்னைக் கவனிப்பார் யாருமில்லை. இனி என்ன! என் முடிவுகாலம் கிட்டிவிட்டதென எண்ணுகிறேன். மழை பெய்து என்னை உக்க வைக் கிறது. தகித்து உருக்குலைந்து வருகிறது என் இதயம் துன்பமிகுதி யினாலேயே வெடித்து விடும் போலிருக்கிறது.

என் கவலைகளை, என் அனுபவங்களை உங்களுக்குச் சொல்ல வேண்டுமென்று ஆசைப்படுகிறேன். இதன் மூலமாகவாவது எனக்கு மனப்பாரம் குறையும். அதன் பின்பு நான் செத்து மடிந்து போகலாம். என்கதையை நீங்கள் கேட்க விரும்புகிறீர்களா? அப்படியானால் சரி சொல்கிறேன் கேளுங்கள்.

இந்தியாவில் கோயம்புத்தூர் என்னுமிடத்தில் பெரும் பருத்தி வயல் இருந்தது அவ்வயலில் உள்ள ஒரு பருத்திச் செடியில் நான் தோன்றி னேன். அப்போது என் நிறத்தைப் பார்த்தாலே கண்கூசும். பால் போன்ற வெண்மை நிறம். சிறிது காலத்தின் பின்பு என்னையும் எனது நண்பர் களையும் பிறித்து கூலியாட்கள் பொதிகளாக்கினார்கள். பின்னர் எம் அனைவரையும் இயந்திரசாலைக்கு அனுப்பினார்கள். எனக்கு ஒரே மகிழ்ச்சி.

இயந்திரசாலைக்கு வந்த சிறிது நேரத்தில் ஒரு கதை பரவியது. எங்களை இயந்திரங்களினுட் செலுத்தி விதைகளின்றி வேறாக்கப் போகிறார்களாம். நான் நடுநடுங்கிப் போய்விட்டேன். என் சந்தோசம் மறைந்தது. பின்பு எங்களை இயந்திரங்களினுட் செலுத்தினார்கள். சிறிது நேரத்தின் பின் விதைகளின்றி பிரிக்கப்பட்டு வெவ்வேறு வழியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியே வந்தோம். இவ்வாறு பெறப்பட்ட எங்களுக்கு "பஞ்சு" எனும் பெயர் வைக்கப்பட்டது. பின்பு பல இயந்திரங்களூடாக செலுத்தப்பட்டுத் தூய்மையாக்கப்பட்டோம். பின்னர் எங்களை மூன்றங்குலக் கனமுள்ள பாய்களாக அழுத்தினார்கள். வேறு இயந்திரங்களின் உதவியுடன் எம்மை மெல்லிய இழைகளாக்கிச் சுருள்களாக்கினார். இழைகளாக ஆக்கப்பட்ட எங்களைப் பெட்டிகளில் அடைத்து வேறு ஒரு இயந்திர சாலைக்கு அனுப்பினார்கள். அங்கே பல நிறச் சாயங்களில் ஊற வைத்தார்கள். பின்பு பல இயந்திரங்களின் உதவியுடன் துணிகளாக நெய்யப்பட்டோம்.

இதுவரை அனுபவித்த கஷ்டங்களுக்கெல்லாம் ஒரு விடிவு காலம் வந்ததென்று நினைத்தேன். என்னையும் என் நண்பர்களையும் துணியின் வடிவிலே பார்க்கும் போது மிக அழகாக இருந்தது. எனக்கு என்னை நினைக்கும் போது பெருமையாக இருந்தது. பின்பு துணிகளாக நெய்யப்பட்ட நானும், நண்பர்களில் சிலரும் கப்பல்களில் ஏற்றப்பட்டோம். எங்களுக்கு மிகவும் சந்தோசம் நண்பர்களுடன் பிரயாணம் செய்வ தென்றால் கேட்கவும் வேண்டுமா? எங்களுக்கு அங்கே போகிறோம் என்று துறைமுகத்தில் இறங்கும் வரை தெரியாது துறைமுகத்தில் இறங்கிய பிறகு தான் நாங்கள் இலங்கை வந்துள்ளோம் என்பது தெரிந்தது. எனது மனம் ஆனந்தக் களிப்பில் ஆடியது. இலங்கையைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை முன்பு இருந்தது அது நிறைவேறுவதை யிட்டு எனக்குச் சந்தோசம் எல்லை கடந்தது.

பின்பு நாங்கள் கடைகளுக்கு அனுப்பப்பட்டோம். அங்கு அலுமாரி யில் வீற்றிருந்தோம். கடைக்கு வருபவர்கள் எல்லோரும் என்னையே பார்த்தார்கள். எனக்குப் பெருமை தாங்க முடியவில்லை. திரும்பி உட்கார்ந்து விட்டேன். அந்நேரத்தில் ஒரு பெண்மணி அங்கு வந்தார். என்னைக்காட்டி ஏதோ கூறினார். விற்பனையாளனும் என்னை எடுத்துக் காட்டினான். அவர் என்னைத் தொட்டுப் பார்த்தார். பின் பணத்தை கொடுத்து என்னைப் பெற்றுக் கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்பர்களைப் பிரிகின்றேன் என்ற கவலை இருந்தாலும் அந்தப் பெண்மணியின் வீட்டிற்குச் செல்கின்றேன் என்று நினைக்கும் போது மகிழ்ச்சியாக இருந்தது. அங்கு அவரின் சின்னமகளின் மேனியை அலங்கரிப்பதில் சொல்லொணாப் பேரின்பம் அடைந்தேன். அவள் பிஞ்சுக் கைகள் என்னைத்தொடும்போது நான் என்னையே மறந்தேன். அவள் எந்நேரமும் ஆசையுடன் என்னையே அணிவாள். பாடசாலைக்கு அணிந்து கொண்டு செல்வாள். மாலையில் கடற்கரைக்குப் பெற்றோ ருடன் செல்லும் போது அணிந்து கொள்வாள். எனக்குப் பெரிய மகிழ்ச்சி ஆறுமாத காலம் சந்தோசமாக வாழ்ந்தேன்.

இவ்வாறு பலமுறை அணியப்பட்டுச் சலவை செய்யும் அவர்களது வேலைக்காரனால் கிழியுண்டேன். பின் அவனாலே காலத்தின் பின் விளக்குத் துடைக்கப் பயன்பட்டேன். அதன் பின்பு குப்பை மேட்டில் ஏறியப்பட்டேன். இன்று யாரும் கவனிப்பாரில்லாமல் வாடுகிறேன். உயர்ந்த நிலையில் இருக்கும் போது மாத்திரம் பெட்டியில் பூட்டிவைத்துப் பாதுகாப்பார்கள் நிலை கெட்டுவிட்டால் இப்படிக் கேவலப்படுத்துவார்கள். இனி என்ன? என் முடிவு நாளும் நெருங்கி விட்டது. என் வாழ்வு வீழ்ந்து போனாலும் என் எசமானர் குடும்பம் சுகத்தோடு வாழவேண்டும் அதுவே என் விருப்பம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிந்தி வந்த ஐந்து நிமிடங்கள்



ந.தர்மிலன்
தரம் - 06

ஐயோ!
இது என்ன பார்வை!
வெறும் ஐந்து நிமிடங்களுக்காகவா?

கணநேரம் தான்
சுணங்கி வரவில்லையே
மினக் கெட்டுப்போய்
வணக்கம் சொல்ல
மென்று விழுங்குகிறார் அந்த
- மனுசன்

புலமைப்பரிசில் வகுப்பு
பொடியன் கெட்டிக்காரர்
பொல்லாக் குழப்படியும் கூட
பொறுப்பாய் பார்த்தால்
பெறுபேறு உயரும்

மெச்சியே புகழ்ந்தார் என்னை
உச்சி குளிர்ந்து போனேன்
போச்சா இன்று மதிப்பு
பூச்சியைப் பார்ப்பது போல்
சீ.....சீ இது என்ன பார்வை?

அந்தி வரைக்கும் நின்று
சேவையாற்றி
பிந்திப் போகும் நானோ
பிந்தி வந்தால் என்ன?.... வெறும்
ஐந்து நிமிடங்கள் தானே?

கெட்டிகார பையன்
சுட்டிக் கண்ணன் நானா
காட்டுவான் தேசிய மட்டம்
பெறுபேறு ஒன்றை
பாராட்ட வரட்டும்
பார்த்துக் கொளவோம் அப்போ...

சாதிக்கப் போகும் துணிவால்
போதித்த ஆசான் நானும்
பெருநடை நடந்தேன்
சோதனை நாளை எண்ணி

நெருக்க வில்லை வகுப்பை
நெருக்கியது இதயம்
படியேறு முன்பே
இடியேறான வார்த்தை
சுட்டிக் கண்ணன் இன்று
சுவரால் விழுந்தான் என்று......

மண்டை உடைந்து இரத்தம்
மடையாய் பெருகியது
மீண்டும் வர ஒரு மாதம்
வேண்டும் என்றும் சொன்னார்
சோதனை நாளை இருக்க
சோதனை அதுதான் என்றார்

நடந்து முடிந்து ஐந்தே
நிமிடம் தான் கடந்தது என்றார்
ஐந்தும் அடங்கி நானும்
குந்தி விட்டேன் அம்மா
பிந்தி வந்த நிமிடம்
ஐந்தை எண்ணி வருந்தி....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிரோட்டம் (கதை)



வ.விந்துஜா
தரம் - 05

ஒரு சிறிய முயல் குட்டி துள்ளிவிளையாடிக் கொண்டிருந்தது. அந்தப்பக்கமாக வந்த ஒரு நரி முயல் குட்டியைக் கண்டது. அதனைப் பிடித்துத் தின்னும் நோக்கம் ஏற்பட்டது. உடனே அதன்மீது பாய்ந்தது. தனக்கு ஏற்பட்ட விபத்தினைக் கண்டு தலை தெறிக்க ஓடத் தொடங்கியது.

நரியோ விடவில்லை தன்னால் இயன்றவரை முயல்குட்டியைத் தொடர்ந்து மூர்ச்சிரைக்க விரட்டிக்கொண்டு ஓடியது. முயல் குட்டியோ தனது பலம் முழுவதையும் திரட்டிக் கொண்டு புயல் வேகத்தில் பறந்தோடியது. நரி எவ்வளவு முயற்சி செய்தும் முயல் குட்டியைப் பிடிக்க முடியவில்லை. ஈற்றில் ஓய்ந்து போய் பெருமூச்சு வாங்க நின்று ஓய்வெடுத்தது. "எட்டாக்கனியாகி விட்டதே" என்று தன்மனதிற்குள் நினைத்து வேதனைப்பட்டது. இதனை மரத்தின் மீதிருந்து நாவற் பழங்கள் பிடுங்கி உண்டு கொண்டிருந்த குரங்கு அவதானித்து மரத்திலிருந்தவாறே "என்ன நரியாரே கேவலம் ஒரு முயல் குட்டியைக் கூட விரட்டிப்பிடிக்க உம்மால் முடியவில்லையே?" என்று ஏளனமாகக் கேட்டது.

நரி பெருமூச்சு விட்ட வாறே குரங்கைப்பார்த்து "நண்பா ஒரு விஷயத்தை நீ மறந்து விட்டாய், நானோ என் உணவிற்காக ஓடினேன். முயற்குட்டியோ தனது உயிரைக் காப்பாற்றுவதற்கான உயி(யு)ர் ஓட்டமாக ஓடிற்று. அதனாலே தான் அதன் ஓட்டத்தில் உயிர் இருந்தது. அது வென்றது. நான் தோற்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் பள்ளி



சி.தமிழ்விழி
தரம் - 03

வானும் மண்ணும் சேர்ந்து நிற்க
வாழ்க்கை ஒளியை தாங்கி நிற்க.

பூவும் காற்றும் அசைந்து வர
புல்லாங் குழலும் பாட்டிசைக்க

காலைக் கதிரவன் தந்துவிட்ட
கருணை கோவில் ஞானி பாடசாலை

மண்ணில் பிறந்த நாள் முதலாய்
என் கண்விழியில் கருமணியாய்

என்னை வா! வா! என அழைத்து நீ
எத்தனை அன்பு நீ பொழிவாய்

வண்ணச் சரஸ்வதி அதிபராய்
வானுலகின் தேவிகள் ஆசிரியராய்

இறையன்பு காட்டும் ஆசான்கள்
இந்தப் பாடசாலையில் இருக்கையிலே

என்ன குறைவு எமக்கு உண்டு
எல்லாம் இங்கே நிறைவாய் உண்டு

வாருங்கள் அனைவரும் ஒன்றிணைவோம்
நம் அதிபர் கரத்தில் கரம் கொடுப்போம்

வாழ வைப்போம் பாடசாலையை
வளர வைப்போம் ஞானி மடத்தை

ஒன்றாய் சேரந்து ஒன்றுகூடி
ஒளிவிளக்கு ஏற்றிடுவோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யானை



கே. இசைப்பிரியா

யானை பெரிய யானை
யாருக்கும் அஞ்சா யானை


பானை வயிற்று யானை
பல்லைக் காட்டா யானை

முறத்தைப் போல காது
முன்னால் வீசும் யானை

சிறிய கோலி குண்டாய்
சின்னக் கண்கள் யானை

முன்னங்காலை மடக்கி
மூட்டி போட்டுப் படுக்கும்

சின்னக் குழந்தையை ஏற்றி
சிங்காரமாய் நடக்கும்



# குட்டிப் பூனை



வ.இசைவிழி
தரம் - 03

குட்டிப்பூனை வீட்டிலே
குறும்பு நிறையப் பண்ணுது

சட்டி பானை உருட்டுது
பாலை எல்லாம் குடிக்குது

எலி பிடிக்கத் தெரியலை
இந்தப் பூனை சரியில்லை

வரட்டும் அம்மா சொல்கிறேன்
வாசல் கதவை மூடுவேன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருவை வணங்குவோம்



புகவியரசி
தரம் - 02

"அ" சொல்லித் தந்து
அறிவை எமக்கு ஊட்டி
உலகை எமக்குக் காட்டி
உயர வைப்பவர்கள்

தவறு செய்யும் வேளை
தவறிடாமல் எம்மை
நல்ல பிள்ளையாக்க
சொல்லிடுவார் கதைகள்

அவர்கள் சொல் கேட்டால்
அவனியில் நாங்கள்
தலைவராகிடுவோம் நாளை
தலை வணங்கிடுவோம்

ஏணியாக இருந்து
எம்மை ஏற்றி வைப்பார்
வாணி போல் எண்ணி
வணங்கி நிற்போம்
அவரை

# விடுகதை



கே.கவினயா
தரம் - 01

01. காலிருந்தும் நடக்க முடியாதவன் யார்?
கதிரை

02. வெள்ளை வீதியில் கறுப்புக்கார் ஓடுது அது என்ன?
கண்

03. பகல் விளக்கு அவன் யார்?
சூரியன்

04. கூடுவான் குறைவான் மாத மொரு நாள் நிறைவடைவான் அவன் யார்?
சந்திரன்

05. காலையில் வந்த விருந்தாளி மாலையானதும் மறைந்து விடுவான் அவன் யார்?
சூரியன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூக்கள்



ல.லக்சிகா
தரம் - 05

நல்ல நல்ல பூக்கள்
நாம் விரும்பும் பூக்கள்
வண்ண வண்ணப் பூக்கள்
வடிவான பூக்கள்

மணம் நிறைந்த பூக்கள்
மகிழ்ந்து நிற்கும் பூக்கள்
பார்ப்போர் மனங்கவரும்
பஞ்ச வர்ணப் பூக்கள்



மாலைகட்டிச் சூட
மகிழ்வான பூக்கள்
இறைவனைக்குச் சாத்தும்
இனிய நல்ல பூக்கள்

# சிறுவர் பாடல்



வ.லக்சி
தரம் - 01

வண்ண வண்ணப் பூக்கள்
வாகாய் அமைந்த பூக்கள்
என்னைப் பார்த்து சிரிக்கும்
இயற்கை அழகுப் பூக்கள்

நான்கிதழ் பூக்கள்
நன்றாய் மலர்ந்த பூக்கள்
மணங்கொண்ட பூக்கள்
மகிழ்விக்கும் பூக்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புள்ள அம்மா



ச.கோமதி
தரம் - 05

அதிகாலையில் எழுந்திடுவார்
அன்பாக அழைத்திடுவார்
கண் விழிக்கும் போது
கனிவான பால்தேநீர் தந்து
வீட்டுப்பாடம் செய்திடவே
விரைவாக உதவிடுவார்
பாடசாலைக்கு அழைத்துச் சென்று
பல்தேவை பூர்த்தி செய்வார்

எனக்குப் பிடித்த நூல்கள் வாங்கி
ஏணியாய் கல்விக்கு வழி செய்வார்
கண்ணை இமை காப்பது போல்
கவனமாக வளர்த்திடுவார்
சுவையான உணவுகளைச்
சுவையாக ஆக்கிடுவார்
அம்மாவின் பாதம் தொழுதால்
ஆண்டவனும் இரங்கிடுவார்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது அறிவு



சி.றேனுசன்
தரம் - 3

01. இலங்கை தபால் அட்டை கட்டணம் எவ்வளவு?

4.00

02. திறந்த நிலையில் உள்ள தபால் அட்டை கட்டணம் எவ்வளவு?

4.50 சதம்

03. சாதாரண தபால் கட்டணம் எவ்வளவு?

5.00

04. பதிவு தபால் கட்டணம் எவ்வளவு?

30.00

05. விரைவு தபால் கட்டணம் எவ்வளவு?

60.00

06. ஒளி வளையங்களையுடைய கோள் எது?

சனி

07. தினமும் அவதானிக்கக் கூடிய கோள் எது?

சுக்கிரன்/ வெள்ளி

08. இலங்கையில் கட்டாயக்கல்வி அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு எது?

1997

09. சாதாரண மனிதனின் உடல் வெப்பநிலை எவ்வளவு?

98.4$^{0}$F

10. இலங்கையில் கொண்டுவரப்பட்ட வறுமை ஒழிப்புத்திட்டம் எது?

சமுர்த்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுபோதையை ஒழிப்போம்!



சி. யாழினி
தரம் - 03

நித்தமும் குடிக்கின்ற மனிதரைப் பார்!
நிதமும் சண்டை பிடிப்பதைப்பார்!
மதுபோதையில் தினமும் அலைவதைப் பார்!
மனைவி மக்களை தினமும் அடிப்பதைப்பார்!

வறுமையின் கொடுமையைப் பார்!
வாடி வாடித்தினம் கவலைப்படுவதைப்பார்!
குடித்துக்குடித்து குடல் கருகுவதைப் பார்!
குடியின் கொடுமை தெரியுது யார்!

குடியினை அழிக்கின்ற வழியைப் பார்!
குடும்பம் நிம்மதியாய் வாழ்வதைப் பார்!
நல்ல சமுதாயத்தை உருவாக்கப் பார்!
நல்ல சமுதாயத்தை உருவாக்கப் பார்!
நற்பிரஜையாய் வாழப் பார்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லோருக்கும் சமனான கல்வி



கே.தமிழிகா
தரம் - 05

எல்லோருக்கும் சமனான கல்வி
இதயங்களில் இனிக்கின்ற இனிதான கல்வி

பாரில் எங்கும் இல்லாத புதியதோர் கல்வி
புத்தக சிறையில் இருந்து விடுதலை கல்வி

புதிய பூக்களின் புன்னகை கல்வி
அகரம் படித்திட அழகான கல்வி

சிகரம் தொட்டி சிறப்பான கல்வி
சிறகுகளை விரிக்கச்செய்யும் சிந்தனை கல்வி

அதுவே நம் சமச்சீர் கல்வி
உயர்ந்த தென்றும் கல்விதனில் இல்லை

தாழ்ந்த தென்றும் கல்விதனில் இல்லை
வானம் மட்டும் இனிமேல் எல்லை.

# பொது அறிவு

01. இலங்கையில் உயரமான மலை எது?
    பேதுறுதாலகால மலை
02. இலங்கையின் தேசிய மலர் எது?
    நீல அல்லி, நீலோற்பலம்
03. இலங்கையின் தேசிய மரம் எது?
    நாகமரம்
04. இலங்கையின் தேசிய விளையாட்டு எது?
    கரப்பந்தாட்டம்
05. இலங்கையில் நீளமான நதி எது?
    மகாவலி கங்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வண்ணப் பூ



சி.கயல்விழி
தரம் - 01

வண்ண வண்ண பூவே
வாசமுள்ள பூவே
உன்னைக் கண்டால் எனக்கு
உள்ளம் துள்ளி குதிக்கும்

சின்னப் புள்ளி மான் போல்
உன் வழிகள் பார்த்தால்
பார் உலகின் சாத்தான்
பயந்து மண்ணில் மடிவான்

பல் சிறப்பும் கொண்ட பஞ்சவர்ணப் பூவே
எங்கள் ஊரில் பூத்த அற்புதமான பூவே
ஞானிமடம் என்றும் பரமதேவன் பூவே
பாடசாலைப் பூவே வாழ்க! வாழ்க! வாழ்க!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்றும் இன்றும்
## பாடசாலை



கே. கவிதா
தரம் - 04

அன்று ஓர் ஓலைக் கொட்டகை
இன்று பல மேல் மாடிக் கட்டடங்கள்

அன்று காற்று வாங்க ஆலமரநிழல்
இன்று காற்றுவாங்கக் காற்றாடி

அன்று சுற்றுச்சுவரற்ற வகுப்பறை
இன்று சுவர்மூடிய தனித்தனி அறைகள்

அன்று மைதானம் சுற்றிப் படுகுழியும் பற்றைகளும்
இன்று மைதானம் சுற்றியகட்டடங்கள்

அன்று ஓர் கொட்டகையில் பல வகுப்பறைகள்
இன்று பாடசாலை நிறைந்த வகுப்பறைகள்

அன்று சலாகைக்கப்பில் உபகரணங்கள்
இன்று சுவர்களிலும் யன்னல்கதவுகளிலும்

கற்றுத் தந்த பாடங்களும் படிப்பினைகளும்
இன்றும் வீழாமல், உயர்வாக நாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# என்னால் மறக்க முடியவில்லை



ந.தர்சிகன்
தரம் - 08

என் கண் முன்னே இருந்த பாடசாலையின்
தோற்றமது என் கண்ணை
விட்டு அகலவில்லை
வேயப்பட்ட கூரையும்
ஆலமரநிழலும் அகலவில்லை என்னை விட்டு

அன்றொரு நாள் மோட்டார்
சைக்கிளின் உறுமலும்
அவ் உறுமலின் என் மனப்
பதைபதைப்பும் என்னை
விட்டு அகலவில்லை



என் குழப்படியின் காரணமாய்
என் வகுப்பாசிரியரிடம்
தடியால் அடி வாங்கியதும்
என் சமய ஆசிரியரிடம்
பேச்சு வாங்கியதும்
என்னை விட்டு அகலவில்லை

கணித ஆசிரியரிடம் கொப்பி
கொண்டு வர மறந்ததால்
காதில் முறுக்கு வாங்கி
அழுத ஞாபகம்
ஆசிரியரின் பேச்சைக் காதில் வாங்காமல்
மொட்டை மாடிக்கு ஓடிய ஞாபகம்
கோபம் பெருக் கெடுக்க அங்கிருந்து
குதித்த ஞாபகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணைக் கட்டி விளையாடும் போது
மாடிப்படியில் விழுந்த ஞாபகம்
அன்போடு என் தமிழாசிரியர்
வா என்று என்னை அழைத்த ஞாபகம்

எழுத்தில் வடிக்க முடிவதில்லை
என் கடந்த கால ஞாபகங்களை
ஒரு சில எண்ணங்கள் மட்டுமே இத்தனையும்

# பொது அறிவு



த. சங்கவி
தரம் - 03

01. உலகின் ஒரேயொரு இந்துமத நாடு - நேபாளம்
02. சிப்பியில் முத்து விளைய 15 ஆண்டுகள் ஆகும்.
03. ஆகக் குறைந்த சனத்தொகை கொண்ட நாடு - வத்திக்கான்
04. குறைந்த நாடுகளைக் கொண்ட கண்டம் - அவுஸ்ரேலியா
05. முதலைக்கு எத்தனை பல் விழுந்தாலும் மறுபடியும் முளைத்துவிடும்
06. ஆசியாவிலே ஒரேயொரு கிறிஸ்தவ நாடு - பிலிப்பைன்ஸ்
07. மனித சிறுகுடலின் நீளம் - 4.56m
08. உடலின் உள்ள உயிர் திரவம் இரத்தம்
09. மனித உடலில் 20 இலட்சம் வியர்வைத் துவாரங்கள் இருக்கின்றன
10. கொழுப்பில் கரையும் உயிர்ச்சத்துக்கள் விற்றமின் A விற்றமின் D விற்றமின் E விற்றமின் K
11. மனித உடலின் முக்கிய இருதயத் துடிப்பைத் தூண்டும் பகுதி பேஸ்மேக்கர்
12. பெரிய கண்டம் ஆசியா

## எழுதியவர்

| | | |
|---|---|---|
| ஆத்திசூடி | - | ஔவையார் |
| நளவெண்பா | - | புகழேந்திப்புலவர் |
| பெரியபுராணம் | - | சேக்கிழார் சுவாமி |
| திருப்புகழ் | - | அருணாகிரி நாதர் |
| சத்தியசோதனை | - | மகாத்மா காந்தி |
| பாஞ்சாலி சபதம் | - | பாரதியார் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிப்படை விதிகள்



வ.பார்த்தீபன்
தரம் - II

## அட்சரகணிதம்

1. $a^2 + 2ab + b^2 = (a+b)^2$
2. $a^2 - 2ab + b^2 = (a-b)^2$
3. $a^3 + 3a^2b + 3ab^2 + b^3 = (a+b)^3$
4. $a^3 - 3a^2b + 3ab^2 - b^3 = (a-b)^3$
5. $(a+b)(a-b) = a^2 - b^2$

## தொடர்கள்

1. கூட்டல்விருத்தியின் பொது உறுப்பு $Tn = a + (n-1)d$
n உறுப்புக்களின் கூட்டுத்தொகை $= Sn$
இங்கு → a - முதலுறுப்பு
d - பொது வஜததியாசம்
$l$ - கடைசி உறுப்பு

$$Sn = \frac{n}{2}\{a + l\}$$

$$Sn = \frac{n}{2}\{2a + (n-1)d\}$$

2. பெருக்கல் விருத்தியின் பொது உறுப்பு $Tn = ar^{n-1}$
n உறுப்புக்களின் கூட்டுத்தொகை

$$Sn = \frac{a(r^n - 1)}{r - 1} \quad (r > 1)$$

$$Sn = \frac{a(1 - r^n)}{1 - r} \quad (r < 1)$$



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மடக்கையும் சுட்டியும்**

1. $log_a^a = 1 \leftrightharpoons a^1 = a$
2. $log_a^1 = 0 \leftrightharpoons a^0 = 1$
3. $log_a^{mn} = log_a^m + log_a^n$
4. $log_a^{m/n} = log_a^m - log_a^n$
5. $log_a^{m^n} = n log_a^m$

**வரைபுகள்**

$y = mx + c$

$m$ - படித்திறன்

$c$ - வெட்டுத்துண்டு

**உருளை**

பரப்பளவு - $2\pi r^2 + 2\pi rh$

கனவுளவு - $\pi r^2 h$

**கோளம்**


பரப்பளவு - $4\pi r^2$

கனவளவு - $4/3\pi r^2$

**செங்கோண அரியம்**

பரப்பளவு - 2முக்கோண பரப்பு + 3செவ்வக பரப்பு

கனவளவு - முக்கோண அடிப்பரப்பு × செங்குத்து உயரம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகை ஐக்கியப்படுத்துவோம்



ச.சாலினி
தரம் - 11

"அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு" என்கின்ற பழமொழி யின் கருத்து உணர்த்துவது போன்று ஒருமைப்பாட்டின் மூலமே வெற்றியினைப் பெற்றுக்கொள்ள முடியும்.இதற்கு சிறந்த ஐக்கியம் பேணப்பட வேண்டும். உலக ஐக்கியம் என்பது ஒற்றுமை, சமாதானத் தைப் பேணுதல், பிரிவினைகளை ஒழித்தல், முரண்பாடுகளைத் தீர்த்தல், இன மத ஒருமைப்பாடுகளை கட்டியெழுப்புதல் போன்றவற்றின் மூலமே உருவாக்கப்படுகிறது.

உலக ஐக்கியத்தைப் மேம்படுத்துதல் மூலமே அன்பான மற்றும் நன்னடத்தையுடையவர்களாக ஒவ்வொரு மனிதர்களையும் உருவாக்க முடியும். மனிதாபிமானமற்றதாக மாறிவரும் உலகைச் சிறந்த மனிதாபி மானமுடைய கருணைத் தேசமாக மாற்ற ஐக்கியம் பேணப்பட வேண்டும்.

உலக ஐக்கியத்தை சீர்குலைக்கும் செயற்பாடாக இன,மத, மொழிப் பிரிவினைகளைக் குறிப்பிட்டுக் கூறமுடியும். இன முரண்பாடு பற்றி நோக்குவோமாயின் அண்மைக்காலத்தில் நடைபெற்ற முஸ்லீம் களுக்கும், சிங்களவர்களுக்கும் இடையே நடைபெற்ற இன முரண்பாடு இலங்கையில் இடம்பெற்றதாக இருந்தாலும் உலக ஐக்கியத்திற்கும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இவ்வாறு பல நாடுகளில் மத முரண்பாடு, மொழிப் பாகுபாடு, மதப்பாகுபாடு, நாடுகளுக்கிடையே அரசியல், பொருளாதாரப் போட்டிகள் என்பன நடைபெற்ற வண்ணம் உள்ளன. இவற்றினை நீக்கி இன,மத,மொழி ஒருமைப்பாட்டை மேம்படுத்துவத னூடாகவே ஐக்கியத்தினை கட்டியெழுப்ப முடியும்.

உலகில் தம்மிடமுள்ள செல்வத்தையும், நல்ல தன்மைகள், பண்புகளைப் பகிராதவர்கள் வாழும் போதே இறந்தவர்கள் எனக் குறிப்பிடப்படுகின்றது. எனவே போட்டி,பொறாமைகளைக் களைந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டுக்கொடுப்பதன் மூலமே ஐக்கியத்தைக் கட்டியெழுப்ப முடியும்.

புறநானூற்றில் கூறப்படுகின்ற "தீதும் நன்றம் பிறர் தர வாரா" என்கின்ற கூற்றிலே எந்தச் சூழ்நிலையும் தனது என ஆக்கிக்கொண்டு வாழப்பழகிவிட்டால் வாழ்க்கை பாழ்படமாட்டாது. அதற்கு மாறாக நாம் எதன் மீது பற்றுவைத்து அது கிடைக்காவிட்டால் மற்றவர்கள் நமக்குச் சதி செய்து விட்டார்கள் அதனை எனக்கு கிடைக்காது செய்துவிட்டார்கள் என எண்ணி மனச்சமாதானம் இழந்து மிகவும் துன்புறுகின்றோம். வாழ் வதற்கு பொருள் வேண்டும் என எண்ணி அதனை ஓடி ஓடித் தேடுகின் றோம். அதற்காக அலைந்து நிம்மதியை இழந்து விடுகின்றோம். இதனால் பொருளாதாரம் தொடர்பான பிரிவினைகளும், போட்டி மனப் பான்மையும் வாழ்வின் நிம்மதியினை சீர்குலைத்து விடுகின்றது. கண் மூடித்தனமான எண்ணங்களைக் களைவதனூடாகவே ஐக்கியத்தைக் கட்டியெழுப்பி அன்பான சமூகத்தினை உருவாக்க முடியும்.

நாம் ஒவ்வொருவரும் பணம், புகழ், பதவி என்கின்ற அடிப்படை யில் உருவாகும் போட்டியினை நீக்க வேண்டும். அதற்குச் சிறந்த மனப் பான்மையினை உருவாக்க வேண்டும். இதனூடாகவே வேற்றுமை களைத் தகர்த்தி ஒற்றுமையைக் கட்டியெழுப்பி ஐக்கியத்தை உருவாக்க முடியும் . எந்தப் பிரச்சினைகளையும் சரியாகக் கையாள வேண்டும். விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையை உருவாக்க வேண்டும். சங்கடங் களை சகித்து வாழப்பழக வேண்டும். குறுகிய மனப்பான்மை ஒற்றுமை யினை சீர்குலைத்து விடும். எனவே குறுகிய மனப்பான்மையினை விட்டொழிக்க வேண்டும்.

வெவ்வேறு ஜாதிகள் எதற்கு? வெவ்வேறு மதங்கள் எதற்கு? இதனால் ஏற்றத் தாழ்வுகளும் முரண்பாடுகளுமே உருவாகின்றன. சண்டைகள் உருவாகிச் சமத்துவம் தொலைந்து விடுகின்றது. எல் லோரும் இப்பூமியில் பிள்ளைகள் என்று வாழ்தலே இன்பமாய் வாழ் வதற்கு ஒரே வழி பிரிவினைகளைக் களைந்து ஐக்கியத்தினை பேணி அகிலத்திலே வாழ்ந்திடுவோம். ஐக்கியத்தை நாம் பேணமுடியும். ஏனெனில் ஒவ்வொரு நாடும் சுதந்திரத்துடன் விளங்குவதற்கு பல இனத் தலைவர் களின் பணியேயாகும். அவர்கள் இன,மத பேதமின்றி பல்வேறு இனத்தவர்களுடன் இணைந்து செயற்பட்டமையாலே ஒவ்வொரு நாடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீறுநடை போடுகிறது. அவர்களும் இன,மத,மொழி வேறுபாட்டினைக் கடைப்பிடித்து முரண்பாடுகளை ஏற்படுத்தியிருந்தால். நம் நாடுகளின் நிலையை எண்ணிப்பாருங்கள் நாம் ஒவ்வொருவரும் இன,மத,மொழி வேறுபாட்டினை வீசி எறிந்து அகிலத்திலே ஒற்றுமையாய் வாழ்வோம்.

விஞ்ஞான தொழில்நுட்ப மாற்றங்களினால் சுருங்கி வரும் உலகில் மனிதர்களது மனங்களும் மாற்றமடைந்து வேற்றுமைகளும், போட்டிகளும் அதிகரித்து செல்வதனால் பாகுபாடுகளே அதிகரிக்கின்றது. இது ஒருமைப்பாட்டினைச் சீரழித்து அழிவுகளையே மேலோங்கச் செய்கின்றது. எனவே விஞ்ஞானத்தின் வளர்ச்சியால் மாற்றமடையும் இவ்வுலகினை அன்பாலும், சிறந்த ஒருமைப்பாட்டினாலும் கட்டி யெழுப்புவோம். உலக ஐக்கியத்தினை மேம்பாடடையச் செய்வோம். இவ்வுலகினை அன்பினாலும் ஆளும் நோபல் பரிசு பெற்ற முதல் சிறுமியை உங்களுக்குத் தெரிந்திருக்கும் அவர் தான் பாகிஸ்தானில் பிறந்த சிறுமி மலாலா ஆவார். அவர் என்ன விடயத்திற்காகப் போராடி வெற்றி பெற்றார். அவர் வெற்றி பெற்றது மட்டுமல்ல நமது கல்விக்கு சமாதானத்தைத் பெற்றுத் தந்துள்ளார். இவ்வாறான அறிஞர்கள் மூலம் எமது அகிலத்தை ஐக்கியமுள்ள அகிலமாக மாற்றமுடியும்.

கேள்விப்படுகின்ற விடயங்களை நம்பி தவறான முடிவுகளை எடுக்கக் கூடாது. தீர அறிந்த பின்பு முடிவு எடுத்தலே நன்று. அற்ப விடயங்களை பெரிதுபடுத்தக்கூடாது. மற்றவர்களது கருத்துக்கள் எண்ணங்களுக்கு மதிப்பளிக்க வேண்டும். மற்றவர்களுடன் மரியாதை செலுத்துதல், இனிய இதமான சொற்களைப் பேசுதல் சிறந்தது. இவற்றின் மூலம் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்வதனூடாக இணைக்கப்பாட்டுடன் கூடிய ஐக்கியத்தினைக் கட்டியெழுப்ப முடியும்.

உலக மக்கள் அனைவரும் ஒரு தாய் மக்கள். நாம் இன,மத, மொழிப் பிரிவினைகளை இல்லாதொழிக்க வேண்டும். நாடுகளுக் கிடையிலான அரசியல், பொருளாதாரப் போட்டிகளையும் நாடுக்குள்ளே ஏற்படும் முரண்பாடுகளையும் இல்லாதொழித்து ஒவ்வொரு மனிதனை யும் அன்பும் மனிதாபிமானமுள்ளவனாகவும் மாற்றி உலக ஐக்கியத்தை நிலைநாட்டுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Big Surprise



S.Sajintha
Grade - 10

The two men Lacey and Barnes Waited in their car about a quater of a mile from the big house. They sat there in the darkness, smoking , hardly talking. It was now a light in one of the upstairs windows. It flashed once, twice three times. ' That was the signat' Lacey said. Both men got out of the car. They were dark clothes. They now put gloves. Lacey had a small bag of clothes.

Both of them entered that house's big gate. Suddenly, a dog started barking. Barnes put some pieces of bones infront of the dog. The dog started to eat very happily. Then, Barnes went to the bathroom and changed his dress. At the same time, Lacey prepared two cups of juice. The members of that house were sleeping deeply. After, Enjoying the drink Lacey went to the big room. There was a middle aged man sleeping. Lacey hit him. Suddenly that middle aged man woke up and shouted "thief.........thief".

All the family members gathered into that young man's room. There was no any symbol to the thief. Suddenly little boy shouted "Look at that back of the door..."

All Surprised to look Lacey and Barnes. Little boy ran and hugged both of them. They couldn't escape from that fit hug. Lacey and Barnes kissed the little boy. Middle aged man asked Lacey and Barnes 'how did you enter our home with out our notification?

"Our lovely dad! We Wanted to give you a surprise to the new year"

The Sun Started to rise. Sound of crackers touched the sky. "My dear family happy new year" said Barnes. That family celebrated that new year very very happily.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Colour Poem (My Own Poem)



N.Tharmilan
Grade - 06

Milk is white
Silk is might
Sky is blue
But, Shy is a glue
Leaf is green
But, Life is a scene

Dark is black - dog's
Bark makes fun
Banana is yellow
Never water in shallow
Hello! Hello! pity
Your colour is kind
Red is poor - All
Blood colour is red
No any varies, then?
Why do you fight?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Computer



S.Saranraj
Grade - 07

Computer is an electronic machine which is capable of performing calculations and doing other manipulations of various type of data, under the control under a set of instructions called a computer programme. The machine itself is the hard ware and the instructions are the programes or software.

Depending upon size, computers are classified as main frames, minicomputers and micro computers, palm computers etc. The formation of the computer took hundreds of years. Charles babbage is known as the father of computers. To function with a computer we should have a (Cpu, monitor, key board and a mouse.) Now - a - days, the computer is the main source of information. Using the computer we can find information, type documents and take a print out. The computer has also many advantages and disadvantages.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Father
## (My own poem)



N.Tharsika
Grade - 10

Father is really fair
He works in air
Guides us tallented
Really really hand some
He gives us energy
I like his roars

He likes as bee
Never lies in bed
He looks to be
Young man's head
Give prefer to our - education
Moral support spirit
Life long motivation
God thank for your gift!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# The fox without tail



K.Thamilnilaa
Grade - 03

A Fox was once caught in a trap. It was only after a tough struggle that she could get free. But to her sorrow, her beautiful tail had been cut off and left in the trap.

How ugly I shall look moaned the fox, "won't the other foxes laugh at me?"

"Thinking hard, the fox hit upon a plan to save herself from being laughed at. She called a meeting of his friends and said, "Brothers! Have you ever wondered why after all, we carry this long tails?" Let us cut them off and be free from their nuisance."

But the other foxes had noticed her cut off tail. They laughed aloud and replied, "you used to say that tails lookd very fine when your own was all right. Now that you have lost yours, you want us to lose ours too".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Parrot
# (My own poem)




V. Nilavan
Grade - 06

**Green bird parrot**
**It likes carrot**
**Can run fast**
**I have tell more**

**Red colour beak**
**Necklace in her neck**
**Pretty coloured feather**
**Enjoy our weather**

**I want to be a parrot**
**Round around the world**
**Don't have any threat**
**So,so pretty parrot**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# My Self



S.Seranila
Grade - 03

My name is Seranila
I live at Siththankurichchi
I am eight years old
I am in grade three
I am a pupil at Ku/Gnanimadam G.T.M School
I have two sisters
I like English very much
My hobby is reading stories
My favorite food is idly
My ambition is to be an engineer

# Sigiriya



J.Tharmikan
Grade - 05

Sigiriya is a rock fortress. It was built by king Kasyapa. Kasyapa wanted a safety place. So he selected sigiriya rock and moved from Anuradhapura.

Where he built a beautiful palace on the top of the rock, he built a pond Now also we can see the ruins. On the side of the rock he painted beautiful pictures. We can see some pictures even today.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# My Pet



J.Mathinila
Grade - 03

My pet is a dog
His name is Jimmy
He plays with me
He likes meat and bones
When he sees strangers
He barks at them
His colour is brown
It has a bushy tail
He can shake hands
I like my dog much



# My School



K.Kajeerththan
Grade - 09

A School can make
Or mar us
It is reall
Not only empty building
School is a factory
Produces good citizen
Luckily I've receied
Loving, caring, sharing
Indicator of directory
Learn lot dozens
Binding by prides
I love my mum
You give my life



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Sixty seconds make a minute



K.Thajeepan
Grade - 11

Sixty seconds make a minute
Something sure you can learn in it
Sixty minutes make an hour
Work with all your night and power
Twenty - four hours make a day
Time enough for work and play

Seven days a week will make
You will learn if pains you take
Fifty - two weeks make a year
Soon a new one will be here
Twelve long months a year will make
Say them now without mistake.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# We should save Electricity



S.Dilani
Grade - 06

Electricity is important for our day - to-day life. These days people cannot do any work without electricity.

Because everything is done by machines. Machines are powered by electricity. Even house hold work is done by electricity. We use electricity for cooking, boiling water and for baking.

Most of us donot know how electricity is produced. It is converted from water, wind, sunlight or fuel. They are natural resources. Thus we waste electricity.

It is our duty to save electricity. We should have pragramme like "Earth Hour" Let us switch of the lights before we go to bed and help to save electricity.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Future Environment



S.Salini
Grade - 11

Enviroment is surrounding of us. It has living and non living things. There was a blance in the ancient enviroment . There was a vast change happned after the industrial revolution.

The future a century hen, holds a lot of facination. At the rate new inventions are coming in, one after another, it would be a fantastic world! In future the uncountable inventions will be decorated our environment. There will be many advantages in every fields like medicine, agriculture, industry etc.

At the next side future environment will face many challenges by the act of human. such as pollution, lack of resources, large papulation growth, traffic, cultural changes, poverty disasters etc.

Reason of green house effect, the earth will burn. by the heat. At the natural Circle will be be disturbed. People will try to fight to take the limited resource to complete unlimited needs.

Arrival of new media, the time spendding for good values will fall and the younger generation will addicts to durugs, smoke etc. It will lead the globe in a wrong way.

As a responsible person, we must try to keep our environment clean. we must try to keep our environment clean. We must ready to help to our environment from dinger. As a good aitizen, we have the ability to face the future challenges successfully.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Advantages & Disadvantages of T.V



P.Kujiliny
Grade - 11

One of the modern inventions is television. Now, every house has a T.V in the show room. It was a best invention. It helps the students, teachers, farmers workers in many ways.

Many channels telecast many educational progromme as general knowledge, speech programmes, Quiz competition "oru Sol oru varththai" etc. It helps to wide up the world knowledge. Some forecasts help to avoid dangers as flood, earth quake, cyclone etc.

It is a good media to spread news, because it brings news to ear and eyes. Al though there are many forms of entertainment, to those like famers, workers and to those who cannot read or write, the television, the cinema and the radio are the ideal form of entertainment.

Television however advanced it is, can never replace books or the pleasure of reading True the T.V creates many facinating visual images but its ability is limited.

Large number of children addict to television and spend their all time infront of T.V. That's why they could't score more marks in the exams.


Some unsuitable programmes mislead the children. Some children pretent them as heros and fall into danger.

Inventions are for the development of the society. Every thing has good and bad sides. We must only take the good things as swan.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Best Friends



V.Partheepan
Grade - 11

Accept you as you area
Believe in having fun
Cherish time together
Dream big dreams
Enrich comfort and delight
Follow up and follow through
Grow forever memories
Honor each other's feelings
Invite you into their hearts
Just call to say "How are you?"
Know when something's up
Love you. no mater what
Multiply joys and die sorrows
Nurture each other's souls
Overcome adversity together
Pick you up when you are down
Quickly forgive and make up
Remind you of your greatness
Smile when they think of you
Thrive on shared trust
Understand when to "just" listen
Value time together
Walk with you side by side
X perience ups and downs
Zest to live, love and laugh.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் பாடசாலை



திரு.சி.சிங்கராசா
ஆசிரியர்

அன்பும் அறிவும் பெருக்கிடும் பள்ளிச்சாலை
அன்புடன் அரவணைக்கும் பள்ளிச்சாலை

ஆனந்தமாய்ப் பள்ளிவரும் மாணவரை
ஆலமரம் முன் நின்று வரவேற்கும்

இனிய வழிகாட்டும் அதிபருடன்
இணைந்து பணியாற்றும் ஆசிரியர்கள்

ஈழவள நாட்டின் ஞானிமடக் கிராமம்
ஈன்றெடுத்த கிளி / ஞானிமடம் அ.த.க பாடசாலை

உரிமையுடன் கல்வி கற்க
உரிய கல்விச்சாலை இது

ஊராரின் ஊக்கத்தினால் உருவான சாலை
ஊற்றெடுத்த காலம் முதல் உறங்காத சாலை

எல்லோரையும் வரவேற்கும் இனிய பாடசாலையின்
எழில் கொஞ்சும் கட்டடங்கள் மனதைக் கவரும்

ஏர்த் தொழிலின் ஏற்றம்
ஏணிப் படிகளாகக் கல்வித் தோற்றம்

ஐய மற்ற கல்வியினால்
ஐக்கியப்படும் மாணவர்கள்

ஒன்றுபட்ட சேவையினால்
ஒருவருக்கு இல்லைக் குறை

ஓராண்டு சென்றால் இதன் அகவை அறுபத்தைந்து
ஓகோ என்று உயரும் ஒளி மிக்க கூடம்

ஒளவையார் நீதி நெறிக்குதவும்
ஒளடதம் இது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனவெழுச்சிசார் நுண்மதி



த.அம்பிகைபாகன்
ஆசிரியர்

உளவியலில் அண்மைக்காலத்தில் தோன்றிய புதியதொரு எண்ணக்கரு தான் மனவெழுச்சிசார் நுண்மதியாகும்.

மனவெழுச்சிசார் நுண்மதிக்கான விஞ்ஞான ரீதியான, பிரயோக மானதும் தெளிவானதுமான வரைவிலக்கணம் நுண்மதி, மனவெழுச்சி, சிந்தனை என்பவற்றைத் தொடர்புபடுத்தியே அமைய வேண்டும்.

முறை சார்ந்ததொரு வரைவிலக்கணம் கூறுவதாக இருந்தால் "மனவெழுச்சிகளுடன், மனவெழுச்சிகளைப்பற்றிக் காரணம் காணவும் சிந்தனைய மேம்படுத்தவும் மனவெழுச்சிகளைப் பயன்படுத்தக்கூடிய தொரு ஆற்றல்" என வரையறுக்கலாம்.

அதாவது மனவெழுச்சிகளைத் துல்லியமாகப் புலக்காட்சி பெறு வதற்கான ஆற்றல்கள், சிந்தனைக்கு உதவும் நோக்கில் மனவெழுச்சி களை அடைவதற்கும், உருவாக்குவதற்குமான ஆற்றல் கள், மனவெழுச் சிகளையும் மனவெழுச்சிசார் அறிவையும் விளக்கு வதற்கான ஆற்றல் கள், மனவெழுச்சிசார் நுண்மதி வளர்ச்சியை உயர்த்தும் வகையில் மனவெழுச்சிகளை பிரதிபலிப்புடன் ஒழுங்காக்கும் ஆற்றல்கள் என்பவற் றையும் இது உள்ளடக்கியிருக்கும்.

மனவெழுச்சிசார் நுண்மதியானது பிரதான நான்கு ஆற்றல் களைக் கொண்டிருக்கும்.

01) தன்னிலும் மற்றவர்களிலும் மனவெழுச்சிகளைத் துல்லியமாக புலக்காட்சி காணும் ஆற்றல்.

02) சிந்தனையை எளிமைப்படுத்துவதற்காக மனவெழுச்சிகளை பயன்படுத்தும் ஆற்றல்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03) மனவெழுச்சியின் கருத்தை விளங்கிக் கொள்ளும் ஆற்றல்

04) மனவெழுச்சியை சமாளிக்கும் ஆற்றல்

மேலும் மனவெழுச்சியை நுண்மதியானது மூன்று விரிவான தொகுதிகளாகப் பிரிக்கப்படலாம்.




**01) மனவெழுச்சிகளை புலக்காட்சிப்படுத்தல்**

மனவெழுச்சிகளை சொல்சாரா வகையில் பெறுதலும் வெளிக் காட்டுதலும் என்பது இத்துறையில் மிக அடிப்படையான ஆரம்ப ஆற்ற லாகக் கருதப்படுகிறது.

கூர்ப்பு உயிரியலாளர்கள் மற்றும் உளவியலாளர்களின் கருத்துப்படி விலங்கினத்தில் மனவெழுச்சி வெளிக்காட்டல் சமூகத் தொடர்பாடலுக்கான மிகவும் அடிப்படையான அம்சமாகும்.

மனித இனத்தில் மகிழ்ச்சி, துக்கம், கோபம், பயம் போன்ற உணர்வு கள் முகபாவனை மூலம் வெளிக்காட்டப்படும் போது பெரும்பாலும் எல்லா மனிதர்களும் இதைப்புரிந்து கொள்கிறார்கள்.இது தொடர்பாக ஆராய்ந்த மனவெழுச்சி ஆய்வாளர்களும், கூர்ப்பு, உயிரியலாளர்களும், சொல் சாரா நடத்தை நிபுணர்களும் மனவெழுச்சிகளை மனித இனம் எவ்வாறு புரிந்து கொள்கிறது. எவ்வாறு வெளிக்காட்டுகிறது என்பது பற்றி விளங் கிக் கொள்ள பல்வேறு அணுகுமுறைகளை முன்வைத்துள்ளனர். ஒருவரின் முகபாவம் அல்லது குரலில் இருந்து மனவெழுச்சியைப் பற்றி உயர்மட்டத்தில் மேலும் விளங்கிக் கொள்ள முக்கியமானதொரு ஆரம்ப புள்ளியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**02) சிந்தனைய எளிமைப்படுத்து மனவெழுச்சியை பயன்படுத்தல்**

மனவெழுச்சியானது அறிதல் சார் ஆற்றலுள் பிரவேசித்து சிந்தனையை மேம்படுத்த வழிகாட்டும் ஆற்றயை இது குறிக்கிறது. மனவெழுச்சிகள் சிந்தனைக்கு முதலிடம் அளிக்கிறது அல்லது மன வெழுச்சி வெளிப்பாட்டுடன் நாம் துலங்கும் ஒரு விடயம் எமது கவனத் தைப் பற்றிப்பிடித்துக் கொள்கிறது.

எனவே மனவெழுச்சிசார் உள்ளீட்டிற்கான ஒரு நல்ல முறைமை இருப்பது உண்மையிலேயே முக்கியமான விடயங்களைப் பற்றிய நேரடி சிந்தனைக்கு உதவியாக அமையும்.

சில வகையான ஆக்கங்கள் உருவாதற்கு மனவெழுச்சிசார் மிகமுக்கியம் என ஆய்வாளர்கள் கருதுகின்றன. ஆக்க சிந்தனைகளை நடைமுறைப் படுத்த நல்ல மனோநிலைகள் அவசியமாகும்.

**03) மனவெழுச்சியை விளங்கிக் கொள்ளல்**

மனவெழுச்சிகள் தகவல்கள் வெளிக்கொணருகின்றன அதாவது மகிழ்ச்சியாக இருக்கும் போது ஏனையோருடன் இணைந்து செயற்படவும் கோபமான மனநிலையில் இருக்கும் போது ஏனையோருக்கு தீங்கு செய்ய அல்லது அடிக்க விரும்புவர்.

**04) மனவெழுச்சிகளைச் சமாளித்தல்**

அனேகமான சந்தர்ப்பங்களில் மனவெழுச்சிகள் சமாளிக்கபடக் கூடியவையாக உள்ளன. முதலில் மனவெழுச்சி வெளிப்படுத்தும் தகவல் களைப் புரிந்து கொள்ள வேண்டும். எந்த அளவு சுயகட்டுப்பாட்டின் கீழ் உள்ளதோ அந்த அளவு ஒருவர் மனவெழுச்சிசார் சைகைகளுக்கு தொடர்ந்து உட்பட்டிருப்பார்.

மற்றவர்களைவிட உயர் மனவெழுச்சிசார் நுண்மதி உள்ளவர்கள் பெரும்பாலும் மனவெழுச்சிகளை ந்னறாக விளங்கிக் கொள்ளக் கூடியவர்களாகவும் சிந்தனை மேம்பாட்டிற்கு அவற்றை வெற்றிகரமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்படுத்தக்கூடியவர்களாகவும் அவற்றின் கருத்துக்களை விளங்கிக் கொள்பவர்களாகவும் மனவெழுச்சிகளை விளங்கிக் கொள்பவர்களாக வும் மனவெழுச்சிகளை விளங்கிக் கொள்பவர்களாகவும் சமாளிக்கக் கூடியவர்களாகவும் உள்ளனர்.

திறந்த மனப்பான்மை ஏற்றுக் கொள்ளப்படுதல் உள்ளவர்களாக இவர்கள் காணப்படுகின்றனர். சமூக இடைவினைகளுடன் தொடர்பு டைய ஆசிரியர் ஆலோசகர் மற்றும்........... கடமையுடன் இணைந்த தொழில்களையுடைவர்களுக்கு இவை மிகவும் உகந்தவை.

பொதுவாக நுண்மதியை அளவிடும் போது உளவியலாளர்கள் குறித்ததொரு வகையான சோதனை.அணுகுமுறைகளைப் பயன்படுத்து கின்றனர்.

பொதுவாக ஆளமைக் கூறுகள் எவ்வாறு ஒருவரின் வாழ்க்கையில் செல்வாக்கு செலுத்துகின்றன என்பதை விளங்கிக் கொள்ளவும் மதிப்பிடவும் மனமுச்சிசார் நுண்மதி பெரிதும் உதவியாக இருக்கிறது.

பெரும்பாலான ஆளுமைக்கூறுகள் ஒருவனின் வாழ்க்கையில் மெதுவாக அதே நேரம் உறுதியான செல்வாக்காக சமூக இடைத் தொடரினும் உயர் மனவெழுச்சிசார் நுண்மதியுடையோர் உயர்ந்த சமூக ஆதரவை உடையவர்களாக மற்றவர்களுடன் பிரச்சினையான இடைத் தொடர்பு மிக குறைந்தவர்களாகவும் காணப்படுகிறது.

தனியாள் முரண்பாட்டிற்கு பெரும்பாலும் வெற்றிகரமான தொரு தீர்வாக உயர் மனவெழுச்சிசார் நுண்மதி காணப்படுகிறது.

ஒரு சமூகத்தில் உயர் மனவெழுச்சிசார் நுண்மதி காணப்படின் அங்கு அமைதி காணப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆளுமை வளர்ச்சி மீது தாக்கம் செலுத்தும் காரணிகள்



திருமதி.மிதிலா ஜெயகாந்தன்
ஆசிரியர்

ஒருவரின் ஆளுமை உருவாக்கத்தில் பல காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. ஆளமை வேறுபாடுகளுக்கு காரணமாக அமையும் சில காரணிகள் ஒருவரின் பிறப்பிலேயே பெற்றுக் கொள்ளப் படுகின்றன. ஆளுமையை உருவாக்கும் உயிரியல் காரணிகளை இருபகுதிகளாக கூறமுடியும்.

1. **பரம்பரைக் காரணிகள்**
2. **உடற்காரணிகள்**

நுண்ணறிவும் மற்றும் விசேட திறன்களும் பரம்பரையின் ஊடாகப் பெற்றுக் கொள்ளப்படுகின்றன. உயிரணுக்களில் காணப்படும் குறைபாடுகள் காரணமாக பிறப்பிலேயே ஏற்படும் சில குறைபாடுகள் ஆளுமை வளர்ச்சி மீது விரும்பத்தக்கதாக தாக்கங்களை ஏற்படுத்து கின்றன. ஒருவரின் நரம்புத் தொகுதிசெயற்பாட்டின் மீது தாக்கம் செலுத்து கிறது. அகச் சுரப்பிகளின் செயற்பாடும், சுரப்பிகள் வெளியேற்றும் ஓமோன்களும் நரம்புகளின் செயற்பாட்டுக்கும் தாக்கம் செலுத்தும் அதனால் மனவெழுச்சி இயல்புகளில் வேறுபாடுகள், தீவிர செயல்கள் அடக்கப்பட்ட உணர்வுகள், பதகளிப்பு உதாசீனம் போன்ற குணப்பண்பு களின் வேறுபாடுகள் தோன்றும் இதனால் ஆளுமையில் தாக்கம் விளைவிக்கும் பல உடலியல் வேறுபாடுகள் ஆளுமையில் தாக்கம் செலுத்துவதுடன் சூழற்காரணிகளின் ஊடாக அத்தாக்கங்களை குறை யாக கூடியதாகவும் இருக்கிறது. குழந்தைகள் உடல் உள வளர்ச்சிகள் மீது பிறப்புக்கு முன்னுள்ள சூழல் தாக்கம் விளைவிக்கிறது.

தாயின் போசாக்கு, மனஎழிச்சித் தாக்கங்கள், பாவிக்கும் மருந்துகளள் பிடிக்கப்பட்டுனள்ள நோய்கள் என்பனவாகும். பிரசவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தர்ப்பத்தில் ஏற்படும் நிகழ்வுகளாலும் பிள்ளை மந்த புத்தியுள்ளவர் களாகலாம் அது ஆளுமையின் உருவாக்கத்தில் தாக்கம் செலுத்து கின்றது.

சமூகச் சூழல் ஆளுமை உருவாக்கத்தில் அதிகம் செல்வாக்குச் செலுத்தும். சூழலுடன் நிகழும் இடைத்தாக்கச் செயல்களினால் நாம் பெற்றுக் கொள்ளும் அனுபவங்கள் ஆளுக்காள் வேறுபடும் மேலும் ஒருவர் வளரும் குடும்பத்தின் உட்சூழலும் பல காரணங்களால் வேறுபடக் கூடும். சமூகத்தின் பொருளாதார நிலைமை, சமுதாய வகுப்பு, பிள்ளை கள் வளர்ப்பு முறைகள் வழிபாடுகள், ஒழுங்குகளும் தண்டனைகளும் பெற்றோர்களின் கல்வி போன்ற பல காரணிகள் பிள்ளையின் வளர்ச்சி யில் தாக்கம் விளைவிக்கின்றன. சமுதாய கலாச்சார காரணிகள் காலத் திற்குக் காலம், நாட்டுக்கு நாடு, கலாச்சாரத்திற்கு கலாச்சாரம் வேறுபடும் அதற்கேற்பவே தனியாட்களுக்கு இடையில் தொடர்புகள் வேறுபடுவதன் காரணமாக பெற்றுக் கொள்ளும் அனுபவங்கள் ஆளுமை வளர்ச்சியில் தாக்கம் ஏற்படுத்தும்.

அதாவது பாடசாலையில் அல்லது வகுப்பறையில் மாணவர் களின் ஆளுமை மீது சமுதாய வகுப்பு உட்பட சமுதாய, கலாச்சார காரணிகள் பல தாக்கம் செலுத்துகின்றன. பெரும்பாலும் மத்திய வகுப்பு பெற்றோர்களின் பிள்ளைகள் உயர்கல்வி, எதிர்பார்ப்புடன் கற்றல் செயல்களில் நன்றாகச் செயற்படுகின்றார்கள். ஏனென்றால் மத்திய வகுப்பு பெற்றோர்கள் புறத் தண்டணைகளிலும் பார்க்க குடும்பத்தின் பெறுமானங்களை ஏற்படுத்திக் கொள்ள செயற்படுகிறார்கள். ஆனால் சமுதாயத்தின் கீழ் வகுப்புக் குடும்பங்களில் சரீர தண்டனைகள், புறக் கட்டுப்பாடுகள், குறைந்த எதிர்பார்ப்பு மட்டம் போன்ற நிலைமைகளில் பிள்ளைகள் வளர்க்கப்படுகின்றார்கள். இதனால் பிள்ளைகளின் ஆளுமை வளர்ச்சியில் பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்துகின்றன.

ஒருவர் வயதில் முதிர்ச்சியடையும் போது தன் மீது தாக்கம் செலுத்தும் சமுதாயக் காரணிகளும் மாற்றமடையும் குழந்தை மீது ஆரம்பத்தில் குடும்பம் அதிகம் செலுத்தினாலும் அதனைத் தொடர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டிளமைப் பருவத்தில் சமவயதுக்குழுவினரும், பாடசாலையும், வளர்ந்த பருவத்தில் தொழிற்குழுக்களும் சமய அரசியல் நிறுவனங் களும் பலமான தாக்கம் செலுத்தும். மேலும் பிள்ளையின் ஆளுமை வளர்ச்சி மீது பெற்றோர் – குழந்தை தொடர்புகளின் இயல்புகள் பலமான தாக்கம் செலுத்துகின்றன என்பதைச் சுட்டிக் காட்டலாம்.

தற்கால சமுதாயம் திறன்களைப் பயிற்றுவிப்பதற்காக அதிக அவதானம் அதிக அவதானம் செலுத்துவதைக் காணலாம் இத் திறன்களை உரிய முறையில் பொருத்தமான மட்டத்திற்குப் பெற்றுக் கொள்வதனால் சமுதாய வரவேற்பு அதிகரிப்பதுடன் சிறந்த எண்ணக்கரு வும் காரணமாக அமையும் இது ஆளுமை மீது நேரடியான தாக்கத்தை ஏற்படுத்தும்.

சமுதாய எதிர்ப்புக்களை அடைவதற்கு முடியாமல் போன மாண வர்களுக்கும் இளைஞர்களுக்கும் ஆளுமைச்சீராகத்திற்கு தடைகள் ஏற்படும் இதனால் நெறி பிறழ்ந்த பண்புகள் உருவாகுவதை காணலாம். எனவே இளம் சமுதாயத்தை உரிய முறையில் ஊக்குவிப்பதன் ஊடாக தமது திறன்களுக்கு பொருத்தமாக இலக்குகளை ஏற்படுத்தியும் பயிற்சிக் கும் கற்றல் அனுபவங்களுக்கும் சந்தர்ப்பங்களை வழங்கியும் ஆளுமை வளர்ச்சிக்கு ஆசிரியர்கள் சிறப்பான பங்களிப்பைச் செய்ய முடியும்.

மற்றும் வளர்ந்தவர்களின் முன் மாதிரியும் பிள்ளைகளின் ஆளமை வளர்ச்சி மீது தாக்கம் செலுத்தும் இன்னுமொரு காரணியாக காணப்படுகிறது. குறிப்பாக பாலர் பருவத்தில் குழந்தைகளிடம் ஆளுமை யை ஒழுங்கமைப்பதில் ஒரு நெகிழ்ச்சி நிலைமை காணப்படுவதால் வளர்ந்தவர்கள் அவர்களுக்குச் சிறந்த முன்மாதிரிகளை பெற்றுக் கொடுக்க வேண்டும். உள்வாரியான சிக்கல்கள் குறைந்த ஒன்றிணைந்த நேர்மையான ஆளமையை ஏற்படுத்திக் கொள்வதனால் ஒருவருக்குத் திருப்தியான வாழ்க்கையை அமைத்துக் கொள்ளமுடியும். இது ஆட் களுக்கு பயனுள்ளதும் சமூகமானதுமான தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள காரணமாக அமைவதோடு வாழ்க்கைத் தத்துவம் உருவாகு வதன் ஊடாக ஆளுமை உருவாக்ககத்திற்கு இடம் கிடைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றிகரமாகப் பரீட்சைகளை எதிர்கொள்வோம்



திருமதி.யசோத்தா ரஜீனந்தா
ஆசிரியர்

நாம் வாழும் வாழ்க்கையே ஒரு பெரிய பரீட்சை தான் இவ் வாழ்க்கைப் பரீட்சையின் வெற்றிதோல்வியைத் தீர்மானிப்பது மனிதர் ஒவ்வொருவரது செயற்பாடுகளும் முயற்சிகளுமே ஆகும். எனினும் நாம் இக் கட்டுரையில் பார்க்கப்போவது, மாணவர்கள் எதிர்நோக்கும் பரீட்சைகளையும், அதில் வெற்றி பெறுதற்கான உத்திகளையுமே ஆகும்.

மனிதனது அடிப்படைத் தேவைகள் எல்லாவற்றுக்குமே வெளிப் படையாகவோ மறைமுகமாகவோ போட்டி இருக்கிறது. இவ் அடிப்படைத் தேவைகள் பலவற்றைப் பூர்த்தி செய்வதற்குக் கல்வி அவசியமாக இருக்கிறது. ஆகவே கல்விக்கும் போட்டி இருக்கிறது. அந்தப் போட்டியின் ஒரு முக்கிய அம்சமாகத்தான் பரீட்சைகள் அமைகின்றன.

ஐந்தாந் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையும் பிள்ளைக்கு நிதி உதவியும், சிறந்த பாடசாலையில் அனுமதியும் கிடைக்கிறது. க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் நல்ல பெறுபேற்றைப் பெறுபவர். க.பொ.த உ/தரம் படிப்பதற்கு நல்ல தரமுள்ள பாடசாலைக் குச் செல்ல முடிகிறது. க.பொ.த உ/த இல் நல்ல பெறுபேறு வந்தால் பல்கலைக்கழகம் புக முடிகிறது. எனவே சிறந்த பெறுபேறு கிடைக்க வேண்டும் என்று பிள்ளைகளும் பெற்றோரும் விரும்புவதில் தவறு ஒன்றுமில்லை. அத்துடன் ஒரு பாடத்தில் ஒருவரது வாசிப்புத்திறன், கேட்கும் திறன், பேசும்திறன் மட்டுமல்லாது எழுத்துத்திறனும் அவரது பரீட்சை முடிவில் செல்வாக்குச் செலுத்தப் போகிறது என்பதையும் மறந்துவிட முடியாது.

பரீட்சை தொடர்பான பதகளிப்பு, பதற்றம் காரணமாகப் படித்த விடயங்களும் மறந்துபோகின்ற தன்மை அதிகரிக்கலாம் அதற்காக ஞாபக சக்தியை அதிகரிக்கும் முறைகளைப் பயின்று கொள்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- விடயங்களை ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுத்திக் கற்கின்றபோது ஞாபகம் வருவது சுலபம்.
- பாடமாக்கிக் கற்கின்ற போதும், ஞாபகம் வருவது சுலபம்.
- சோதனைக்கு முந்திய வாரத்தில் படித்த பல விடயங்களையும் சுய ஒலிபரப்புச் செய்து பார்த்துக் கொள்ளலாம் அல்லது நண்பர் குழாமுக்குக் கற்பித்தால் விடயங்கள் நன்கு ஞாபகத்திற்கு வரும்.

## பரீட்சைக்கு முன் அவதானிக்க வேண்டிய விடயங்கள்

- பரீட்சைக்கு முந்திய வாரங்களில் போதுமான அளவு நேரம் நித்திரை கொள்வதே நல்லது.
- தனியே படிக்கும் போது தான் வேகமாகப் படிக்கலாம். ஆயினும் தனியே படித்து அலுத்துப் போன நேரங்களில் குழுப்படிப்பிற்குப் போவது தவறில்லை.
- சோதனை எழுதப் போகும் வருடத்துக்கு முந்திய பத்துவருட வினாத்தாள்களைக் கவனமாக ஆராய வேண்டும். கடந்தகால வினாக்களுக்கான சரியான விடைகளையும் தேடிக் கற்றுக்கொள்ள வேண்டும்.
- பரீட்சை அண்மித்து விட்ட நேரங்களில் புத்தகம் முழுவதையும் அல்லது நோட்ஸ் முழுவதையும் திருப்பிப்படிக்க முடியாமல் போகலாம். ஆகவே, முதல் படிக்கும் போதே முக்கியமான விடயங்களை அல்லது அடிக்கடி மறந்துபோகிற விடயங்களைக் கோடிட்டு வைத்துக் கொள்ளலாம் அல்லது அவற்றை ஒரு சிறு பயிற்சிக்கொப்பியில் குறித்துக் கொள்ளலாம்.

  பரீட்சைக்கு முதல் நாள் இரவே பரீட்சை மண்டபத்திற்குக் கொண்டு போக வேண்டியவற்றை எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும்.

## பரீட்சைத்தினத்தில் கவனிக்க வேண்டிய விடயங்கள்

- பரீட்சையில் அன்று காலையில் நேரத்தோடு நித்திரை விட்டெழுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ☞ நன்றாக குளித்து உடற்சோர்வை நீக்கிக் கொள்ள வேண்டும்.
- ☞ கட்டாயமாகச் சாப்பிட்டுவிட்டுத்தான் (போஷணை மிகுந்து) பரீட்சைக்குப் போக வேணடும்.
- ☞ பரீட்சைத் தினத்தன்று காலையில் இறைவழிபாடு செய்தல் வேண்டும்.
- ☞ பரீட்சை தொடங்கும் நேரத்திற்கு அரைமணி நேரம் முன்பதாகவே பரீட்சை மண்டபத்தில் திட்டமிட்டுக் கொள்ள வேண்டும்.
- ☞ பரீட்சை மண்டபத்தில் சுட்டிலக்கம் இடப்பட்ட மேசையைத் தேடி அமர்ந்து கொள்ள வேண்டும்.
- ☞ தலையிடி வரும் என்ற பயம் உள்ளவர்கள் தலையிடி மாத்திரைகளையும், ஆஸ்மா வரலாம் என்று நினைப்பவர்கள் உள்இழுப்புக் கருவியையும் (Inhaler) பரீட்சை மண்டபத்திற்குள் கொண்டு செல்லலாம்.
- ☞ பரீட்சை மண்டபத்தில் ஆசனத்தில் அமர்ந்து வினாத்தாள் வழங்கப்படுவதற்கு இடைப்பட்ட நேரத்தில் விடைத்தாளைப்பெற்று அவற்றில் சுட்டிலக்கங்களைத் தெளிவாக எழுதலாம்.

  பரீட்சை அனுமதி அட்டையை நிரப்பிக் கையெழுத்திடலாம்.

## பரீட்சை மண்டபத்தில் கவனிக்க வேண்டியவை

- ☞ மண்டபத்தில் இருக்கும் போது அவதானமும் கவனமும் முழுமையாகப் பரீட்சையில் இருக்குமாறு விழிப்புடன் செயற்பட வேண்டும். பூரண சுயகட்டுப்பாடு இ ருத்தல் அவசியம். வெளியே நடைபெறும் எந்த நிகழ்வும் எமது கவனத்தை தத் திசை திருப்ப அனுமதிக்கக் கூடாது.
- ☞ வினாத்தாள் கிடைத்தவுடன் எமது சொந்த மணிக்கூட்டுடன் நேரத்தைச் சரிபார்த்துக் கொள்ள வேண்டும்.
- ☞ விடை எழுதிக் கொடுக்க வேண்டிய விடைத்தாள்களை விட ஒரு மேலதிக தாள்கள் கேட்டு வாங்கிக் கொள்ளலாம். அவை சில விடயங்களை எழுதிப் பார்க்க உதவும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☞ பல்தேர்வு வினாக்களில் எந்த ஒரு வினாவுக்கேனும்அளிக்காது. விடுவது புத்திசாலித்தனமானதல்ல. ஊகத்திலேனும் விடையளிப் பதே சிறந்தது.

☞ எத்தகைய வினாவாக இருந்தாலும் பரீட்சகர் எதை எதிர்பார்க்கிறார் என கண்டுபிடிக்க முயலுங்கள்.

☞ அமைப்பு வினாக்கள் அல்லது கட்டுரை வினாக்களில் நன்குவிடை தெரிந்த வினாவை முதலில் எழுத ஆரம்பிப்பது நல்லது.

☞ எந்தக் காரணங்கொண்டும் கேட்கப்பட்டதை விட அதிகமான வினாக்களுக்கு விடை அளிக்க வேண்டாம்.

☞ பரீட்சை மண்டபத்தில் பார்த்தெழுதல், நோட்ஸ் வைத்திருத்தல் மற்றவர்களோடு கதைத்தல், ஆள் அடையாள அட்டையில் மோசடி செய்தல் போன்ற குற்றச் செயல்களில் ஈடுபட்டு மனப்பதகளிப்பை அதிகரித்துக் கொள்வதைப் போன்ற முட்டாள் தனம் வேறு கிடையாது. நேர்மையாக இருக்கும்போதே அமைதியாக இருக்க முடியும்.

☞ விடைத்தாள் திருத்துபவர் கவனமாக வாசிக்க மாட்டார் என்ற எண்ணத்தோடு முதல் எழுதிய பந்தியை இடையில் திருப்பி எழுதல், பொருத்தமற்று அலம்புதல் போன்றவைபெறக்கூடிய புள்ளிகள் மேலும் குறையவே வழிவகுக்கும்.

☞ விடைகள் எல்லாம் எழுதப்பட்டதும் எல்லா வினாவுக்கும் விடை எழுதப்பட்டதா? என்று கவனித்து விடைத்தாளை ஒழுங்காக அடுக்கிக் கொள்ளவேண்டும்.

☞ பரீட்சை முடிந்தவுடன் யாரும் "எப்படி" என்று கேட்டல் "நன்றாகச் செய்தேன்" என்பதோடு நிறுத்திக் கொள்வது நல்லது. பரீட்சைகள் எல்லாம் முடிவடைந்தபின் ஆறுதலாக ஆசிரியர்களோடு கலந்து ரையாடிப் பிழைவிட்ட இடங்களை அறிந்து கொள்வது எதிர்காலப் பரீட்சைகளிற்கு உதவும்.

எமது அறிவுத் திறனும் எந்த மட்டத்தில் இருந்தாலும் சரி பரீட்சையில் வெற்றி பெறுந் திறனைக் கற்றுக்கொள்வது வாழ்வில் எப்போதும் உதவிக்கொண்டே இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடரும்



திருமதி.ஆரணி முகுந்தன்
ஆசிரியர்

"அன்பு முதியோர் இல்லம்"
யாழ்ப்பாணம்.
29.08.2015

அன்பு மகன் மாறனுக்கு,

நான் பத்து மாதம் சுமந்து பெற்ற என் மகன் எங்கிருந்தாலும் நீடூழி வாழ்க என வேண்டிக் கொள்ளும் அன்பு அம்மாவின் இறுதிக் கடிதம். காலத்தால் காலாவதியாகிப் போகும் தின் பண்டங்கள் போல் தொழினுட்பத்தால் காலாவதியாகிய ஒன்றாகக் கடிதங்கள் மாறிப் போனாலும் என் உணர்வுச் சொட்டலை வெளிப்படுத்த இதைத்தவிர வேறேதுவும் சிறந்ததாக எனக்குத் தெரியவில்லை. அதனால் தான் என் கை நடுங்கலுக்கும், மூச்சிரைச்சலுக்கும் மத்தியில் எழுதுகின்றேன்.

கொழு கொழு என்ற அழகுடன் நீ இந்தப் பூலோகத்தில் காலடி வைத்த கணம் உன் அழுகுரல் கேட்டு நான் மகிழ்ந்து சிரித்த கணம் இப்பொழுதும் அற்புதமாய் இனிக்கின்றது. ஒரு நல்ல தாய் மகன் அழுவதைக் கேட்டு சிரிக்கும் சந்தர்ப்பம் மகனின் முதல் அழுகுரலாக மட்டுமாய்த் தான் இருக்க முடியும். இன்று வரை எண்ணிப் பார்த்து அழுத விழிகளில் கண்ணீர் வற்றி இனிக் கசிவதற்குக்கூட ஒரு துளி தண்ணீரில்லை.

உன் அப்பா பூமியில் விதையாகப் புகைக்கப்பட்டவர். அவரின் வீர ரத்தம் உன் உடம்பில் ஓடுகின்றதா? என்பது சந்தேகம் தான். தாயக விளை நிலங்களை நாசஞ் செய்ய வந்த மத யானையுடன் போரிட்டு, வென்று ரத்தம் பாய அஞ்சா மரணமடைந்தவர் உன் அப்பா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படிப்பட்டவரின் ரத்தத்தில் பிறந்த நீ தாய் நாட்டை விட்டு புலம் பெயர்ந்து வெளிநாடு சென்றது அதிசயம் தான். என்னவோ , உன் தனிப்பட்ட விருப்புக்களில் தலையிட நான் விரும்பவில்லை. உன் சொகுசு வாழ்க்கையைக் கெடுக் க விரும்பவில்லை. என்றாலும், ஒன்று சொல்கிறேன் கேட்டுக்கொள். மண் கொத்தி உடம்பு வலிக்க வேலை செய்யும் உழவனுக்கு இல்லாத வருத்தமெல்லாம் ஏ.சி இல் காலாட்டி உடல் வளர்க்கும் சொகுசு மனிதர்களைச் சீக்கிரம் ஒட்டி உறவாடும். விளைவுவைப் பாஸ், காட் அற்றாக்.

என் பராமரிப்புச் செலவுக்கென மாதாந்தம் தவறாது நீ அனுப்பிய பணத்திற்குக் கோடி நன்றி. அந்தப் பணக் கவரால் தான் உடல் வளர்ந்தது ஆனால், என உள்ளத்து அபிலாசைகள் எல்லாம் செத்து விட்டன. உள்ளம் அனலாய்க் கொதித்து உறவுக்காய் அழுகின்றது.

உனக்குத் தெரியும் தானே தர்மலிங்கம் டொக்ரர். அவரின் பெடியன்களும் உனக்குக் கிட்ட இருப்பதாய்ச் சொல்லி இருக்கின்றாய். தர்மலிங்கம் டொக்ரரின் மனுசியும் எங்கட முதியோர் இல்லத்தில் தான் இருக்கிறா. இப்ப என்னுடைய உயிர்த்தோழி அதனால் தான்.

என்ர உயிர் போகும் போது பாலூத்த என்ர பக்கத்தில இருக்கிறா. கொள்ளி வைக்க நீ, நான் இறந்த செய்தி கேட்டு ஓடி வர வேண்டுமென்ற அவசியமில்லை. இருக்கே இருக்கு ஸ்கைப். அதில் என் ஜீவனற்ற உடலைப் பார்த்தாலே போதுமடா . நீ ஓடி வந்தாலும் உன்னைக் கட்டி அணைத்து, ஆரத் தழுவி முத்தமிடும் வல்லமை அப்போது என் உடலுக்கு இருக்காதது மட்டுமல்ல உனக்கு வாய்க்கு ருசியாய்ச் சமைத்துப் போடவும் முடியாதே.

தூக்குத் தண்டனைக் குற்றவாளிக்குக் கூடக் கடைசி ஆசை கேட்பாங்களாம். உன்னிடம் நான் யாசிக்கும் கடைசி ஆசை இது தான். எங்க கிராமத்திலுள்ள வீட்டை மறந்திடாதே . அது தான் எம் பரம்பரைச் சொத்து. எம் வீட்டை யாருக்கும் விற்று விடாதே. அவ் வீட்டின் ஒவ்வொரு மணித் துளிகளும் எம் மூன்று பரம்பரைகளின் கதை சொல்லும். எம் வீடு வெறும் கல்லு மண்களாலான சேர்க்கையல்ல. அன்பு, முயற்சி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழைப்பு, ஆனந்தம் என்பவற்றாலமைந்த அத்திவாரம். மகனே! உனக்கு ஓய்வு கிடைத்து சுற்றுலா செல்லும் சந்தர்ப்பம் ஏற்பட்டால் ஒரு முறையாவது எங்கள் கிராமத்திற்கு வந்துவிடு உன் பிள்ளைகளுக்கும், பிள்ளைகளின் பிள்ளைகளுக்கும் நாம் எல்லாம் தமிழினத்தின் அடி எனக்கூற மறந்து விடாதே. தமிழ் இனி மெல்லச் சாகுமா?

இல்லை மகனே! நான் மீண்டும் பிறப்பேன். தமிழை வாழ வைப்பதற்காய் உன் வயிற்றுப் பிள்ளையாய்ப் பிறந்து தமிழை வாழ வைப்பேன். இளம் சமுதாயத்தால் மாற்ற முடியாதது எதுவும் இல்லை யல்லவா. ஒரு தமிழன் உள்ளவரை தமிழ் வாழும். வெளிநாட்டு மோகத்தில் தாய்த் திருநாட்டை மறந்து விடாதே. மகனே! நான் மீண்டும் பிறப்பேன் தமிழனாய்.........

கண்ணை இருட்டுகின்றது. மூச்சுக்கள் மேலும் கீழுமாய் நர்த்தனமாடுகின்றன. தினமும் வந்து போகும் மூச்சின் மகிமை இப்பொழுது புரிகின்றது. நாடித் துடிப்புக் குறைகின்றது. த...மி....ழ். ம....ண்.

இறுதி முத்தங்களுடன்,
அ....ம்.......மா

தமிழ் மாறனின் மூத்த மகள் பிரசவ வலியால் துடிக்கின்றாள். அ....ம்......மா என்ற குழந்தையின் அழுகுரல் ஸப்தஸ்வரமாய் ஒலிக் கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்ய வேண்டியவை



திருமதி.வி.சோதிநாதன்
ஆசிரியர்

நட........................ அதிர்வின்றி
பேசு........................ பணிவாக
உண்ணு................ அளவாக
சுவாசி.................... ஆழமாக
தூங்கு.................. அமைதியாக
உடுத்து................. அழகாக
செயல்படு............ அச்சமின்றி
உழை.................... உண்மையாக
சிந்தி...................... சுயமாக
நம்பு....................... சரியாக
பழகு...................... நாகரிகமாக
திட்டமிடு............... முன்னதாக
ஈடுபடு...................... நேர்மையாக
சேமி....................... சிறிதாவது
செலவிடு.............. யோசித்து
நேசி....................... பேதம் கடந்து
படி......................... முடிவின்றி
மரணி.................... பயமின்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கையோடு இணைந்து விவசாயம் செய்வோம்



திருமதி. ஸ்ரீ.சிவரூபன்
ஆசிரியர்

இயற்கையோடு இணைந்து விவசாயம் செய்பவர்களுக்கும் இயற்கையைத்துண்டித்து விவசாயம் செய்யும் மக்களுக்கும் வித்தியாசம் உண்டு. அன்றைய விவசாயிகள் இயற்கையோடு இணைந்து விவசாய நடவடிக்கைகளை மேற்கொண்டதால் எந்தவித நோய்களும் இன்றி ஆரோக்கியமாக வாழ்ந்தார்கள். ஆனால் இன்றைய விவசாயிகள் இயற்கைக்கு முரணான முறையில் அதிகளவு பூச்சி கொல்லிகள் பங்கசு கொல்லிகள் களைநாசினிகளை பயன்படுத்துவதுடன் அளவுக்கு அதிக மாக செயற்கை உரங்களையும் பயன்படுத்துகின்றனர் அவற்றினால் ஏற்படும் தீமை போலவே இயற்கையோடு இணைந்து விவசாயம் செய்தமையால் ஏற்படும் தீமைகள் இயற்கையோடு இணைந்து விவசாயம் செய்யும் வழிவகைகளைப் பற்றியும் ஆராய்வோம்.

அநேகமாக பூச்சி கொல்லி பங்கசு கொல்லி, களை கொள்ளி களில் பார உலோகங்களும் அல்லுலோகங்களும் சேர்க்கப்பட்டு ள்ளதால் குடாநீரை மாசுபடுத்தும் முக்கிய காரணிகளாக இவை அமைவதுடன் விவசாய நீரையும் மாசடையச் செய்கின்றது. இவற்றின் முக்கிய கூட்டுப்பொருட்களாக பிஸ்மத், அன்ரிமணி, துத்ததாகம், பாதரசம், இரும்பு, தகரம்,பார உலோகங்களும் கந்தகம் பொஸ்பரஸ், குளோரின் சயனைட் போன்ற உலோகங்களும் சேர்ந்துள்ளன.

பூச்சி கொல்லிகளின் பாவனை தேவையற்றவற்றை விட பயனுள்ள பறவைகள் மதனீக்கள், மண், புழுக்கள், சிலந்திகள் போன்ற உயிரினங் களையும் அழிப்பதன் மூலம் மீண்டும் மீண்டும் இயற்கையின் சமநிலையை பாதிக்கச் செய்கிறது. அத்துடன் அவற்றின் ஒரு பகுதி பயிர்களினால் உறிஞ்சப்படுவதுடன் ஒருபகுதி நிலத்துடன் நீரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைந்து குடாநீரை மாசுபடுத்துகின்றது. இவ்வாறு உற்பத்தி செய்யப்பட்ட விவசாய விளைவுகளில் பார உலோகங்களும் அலோகங்களும் சிறிதளவுகளில் காணப்பட்டாலும் மனிதன் அவற்றினை உணவாக உட்கொள்வதால் மெலிவடைந்து ஈரல், தசைகள் சிறுநீரகம் போன்றவற்றில் நோய்களை உண்டாக்குகின்றது.

அதிகளவு செயற்கை உரங்களைப் பாவிப்பதனால் மண்ணின் தன்மை மாறுபட்டு அமிலத் தன்மை அதிகரிக்கின்றது. மண்ணின் தன்மை மாற்றம் அடைவதால் இயற்கையாகவே மண்ணிலுள்ள கனியப்பொருள் சக்கரத்தை ஊக்குவிக்கும் நுண்ணங்கிகளுடன் ஏனைய நன்மை செய்யும் நுண்ணங்கிகளும் படிகின்றன. இதனால் இயற்கையாகவே கிடைக்கும் கனியங்கள் கிடைக்காமல் போவதால் வளமற்ற மண் உருவாகின்றது.

சூழலுக்கு நன்மை செய்யும் நுண்ணங்கிகள் பாதிக்கப்படுவதனால் மரம்,செடி,கொடிகளின் காய்ந்த இலைகளும் குப்பைகளும் உக்கலாக இலகுவில் மாற்றமடைய முடியாதுள்ளது. அத்துடன் தாவரங்களின் வளர்ச்சிக்கு தேவையான முக்கிய கனியங்களாகிய கல்சியம் பொஸ்பரசு மகனிஸ் கந்தகம் போன்றன நீரில் கரையும் தன்மையற்ற பொருட்களாக மாற்றப்படுவதால் தாவரங்கள் உறிஞ்சப்பட முடியாதவையாக உள்ளன.

எனவே மண்ணின் தன்மையை பாதுகாப்பதில் முக்கிய பங்கு வகிப்பவை இயற்கை உரங்களேயாகும் காடும் இயற்கை உரங்களில் மிகவும், இலகு வாகவும் குறைந்த செலவிலும் கிடைக்கக்கூடிய தன்மை பசுந்தாள் உரங்கள் பூவரசு, கிளிசிறியா, சணல் போன்றன பயன்படுத்தலாம். அத்துடன் மாட்டெருவும் இயற்கை உரமாக உபயோகிக்கலாம். இவ்வாறு இயற்கை உரங்களை பயன்படுத்துவதனால் நிலம் வளமடைகின்றது அத்துடன் விளைபொருட்களில் தரமும் அதிகரிக்கும் .

எனவே பூச்சி கொல்லிகளின் பாவனையைக் குறைத்து பாரம்பரிய முறைகளிலும் உயிரியலுக்குரிய முறைகளிலும் பூச்சி பீடைகளை கட்டுப்படுத்தலாம். பீடைக்கட்டுப்பாட்டு முறைகளைத் தெரிந்தெடுக்கும் போது கவனத்தில் கொள்ளவேண்டிய பிரதான காரணிகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01) பீடைகளின் வாழ்க்கை வட்டம்

02) பீடைகளின் நடத்தை

03) காலநிலைநிலையும் சுற்றாடல் நிலைகளும்

04) செலவு

எம் முன்னோர்களின் காலந்தொட்டே இன்றுவரை சந்ததியாக விவசாய மக்களினால் மேற்கொள்ளப்பட்டு வந்தன. மரபு முறை பீடைக் கட்டுப்பாடானது. பின்வரும் முறைகளில் மேற்கொள்ளப்படுகின்றன.

01) சுழற்சி முறைப் பயிர்ச்செய்கை

இப்பயிர்ச்செய்கையில் வித்தியாசமான இனத்தைச் சேர்ந்த அல்லது வெவ்வேறு குடும்பத்தைச் சேர்த்த பயிர்களை ஒரே நேரத்தில் போகத்திற்கு போகம் மாறி மாறி பயிர்ச்செய்கைக்கு உட்படுத்துவதால் அதனால் ஒரு இனப்பயிரில் வாழ்ந்த பீடை பிறிதொரு குளப்பயிரில் வாழ முடியாதால் அவை கட்டுப்படுத்த முடிகின்றன.

பொறிமுறைப் பயிர் செய்கை நிலத்தின் சிறிய பகுதியில் குறித்த பயிரை வளர்த்து சிறிது காலத்தின் பின் எஞ்சிய பிரதேசத்திலும் அதே பயிரைப் பயிரிடுவதனால் முதலில் பயிரிடப்பட்ட பயிர் முதலில் முதிர்ச்சியடையும் அவற்றின் பீடைகள் அதிகளவில் அதிகரிக்கும் இப்பீடைகளை இலகுவில் அழிக்கலாம் இதனால் ஏனைய பயிர்கள் பீடைத் தாக்கத்திலிருந்து பாதுகாக்கப்படும் நெல்மூட்டுப் பூச்சியை இம்முறையில் கட்டுப்படுத்தலாம்.

நீர் முளையத்துவம் விவசாயிகள் நீர் மட்டத்தை மாற்றிய மைப்பதன் மூலம் நிலத்தை உலரவிடல் மூலமும் நுண் நீர்ப்பாசனம் மூலமும் களைகளைக் கட்டுப்படுத்தலாம்.

ஆழமாக மண்ணை உழுதல் உழும்போது மண்ணில் வாழும் பீடைக்குடம்பிகள் கூட்டுப்புழுக்கள் சூரிய ஒளிக்கு வெளிக்காட்டப் படுவதனால் இரைகௌவிகளாலும் அழிக்கப்படும் அத்துடன் சாதாரண மான முறைப்பயிர் செய்கை மேற்கொள்வதனாலும் பீடை தாக்கிய தாவரம் பாகங்களை அகற்றுவதாலும் பயிர்களை பீடைகளில் இருந்து பாதுகாக்க முடியும்.

எனவே இயற்கையோடு இணைந்து விவசாயம் செய்வதே மிகவும் சிறந்த முறையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Poem
# When I Saw my Home



Mrs. Aranee Mugunthan
Teacher

Once I Saw My home
heart felt deep sorrow
Tears from the heart
about a Nile flow

No roof, not vast wall
Name who can say tomorrow?
Damaged ruins of stone
gaint war makes the torn

Dad sweat, mam's calling
All know the pillars
We hide for belling
Clouds wisdom killers

Grazing cow in meadow
smelling full cup of milk
Even no any shadow
So, I chase my colourful will.

3rd place, winning poem, District level, (Jaffna District) Competition conducted by education, Art and Cultural Ministry.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 64 வது ஆண்டு நிறைவில் பரிசு பெறும் மாணவர் விபரம்

**2014ம் ஆண்டு கோட்டமட்ட விரைவு கணிதப் போட்டியில் வெற்றியீட்டியோர்**

- சிவரூபன் யாழினி தரம் - 02 2ம் இடம்

**2014ம் ஆண்டு கோட்டமட்ட மெய்வல்லுனர் திறனாய்வுப் போட்டியில் வெற்றியீட்டியோர் விபரம்**

- கிட்ணபிள்ளை டிலக்சன் தரம் - 11
  நீளம் பாய்தல் - 1ம் இடம்
  உயரம் பாய்தல் - 2ம் இடம்

## Winners of English Day Competition 2014 District Level

- Satheeskaran Sajintha Grade - 09 Dictation 1st place
  Jeganathan Kirushanithini Grade - 07 Story telling 3rd place

**வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பிரதேச சபையால் நடாத்திய போட்டியில் வெற்றியீட்டியோர் விபரம் - 2014**

- சிவரூபன் யாழினி தரம் - 2 கதைகூறல் 1ம் இடம்
- சதீஸ்கரன் சயிந்தா தரம் - 9 கவிதை ஆக்கம் 1ம் இடம்
- சதீஸ்கரன் சயிந்தா தரம் - 9 கட்டுரை 2ம் இடம்
- சதீஸ்கரன் சரண்ராஜ் தரம் - 6 கட்டுரை 2ம் இடம்

**கோட்ட மட்டச் சமுர்த்தி நடாத்திய போட்டி முடிவுகள் - 2014**

- ஜெகநாதன் கிருபாந்தினி தரம் - 07 பேச்சு 1ம் இடம்
- சண்முகராசா சாலினி தரம் - 10 பேச்சு 1ம் இடம்

**மாவட்ட மட்டச் சமுர்த்தி நடாத்திய போட்டி முடிவுகள் - 2014**

சண்முகராசா சாலினி தரம் - 10 பேச்சு 1ம் இடம்

**சிறுவர், முதியோர் தினத்தை முன்னிட்டுப் பிரதேச செயலகத்தால் நடாத்திய போட்டியில் வெற்றியீட்டியோர் விபரம் - 2014**

- வசந்தகுமார் பார்த்தீபன் சிறுவர் தினம் கட்டுரை 1ம் இடம்
- சதீஸ்கரன் சயிந்தா முதியோர் தினம் கட்டுதை 3ம் இடம்
- ஜெகநாதன் கிருசாந்தினி சிறுவர் தினம் பேச்சு 3ம் இடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அனர்த்த முகாமைத்துவ போட்டி - 2014 (கோட்ட மட்டம்)**

சதீஸ்கரன் சயிந்தா தரம் - 09 1ம் இடம்

**கோட்ட மட்டத் தமிழ்த்தினப் போட்டி முடிவு - 2015**

| | | | |
|---|---|---|---|
| சதீஸ்கரன் சயிந்தா | கட்டுரை | தரம் - 10 | 3ம் இடம் |
| பாஸ்கரன் குயிலினி | சிறுகதைஆக்கம் | தரம் -11 | 1ம் இடம் |

**வலய மட்டத் தமிழ் தினப் போட்டி முடிவுகள் - 2015**

பாஸ்கரன் குயிலினி சிறுகதை ஆக்கம் தரம் - 11 2ம் இடம்

**கோட்ட மட்ட கணித விஞ்ஞான போட்டி முடிவுகள் - 2015**

சதீஸ்கரன் சயிந்தா தரம் - 10 2ம் இடம்

**வலய மட்டச் சமூக விஞ்ஞான போட்டி முடிவுகள் - 2015**

சதீஸ்கரன் சயிந்தா தரம் - 10 1ம் இடம்

**கோட்ட மட்டச் சமூக விஞ்ஞானப் போட்டி முடிவுகள் - 2015**

சதீஸ்கரன் சயிந்தா தரம் - 10 1ம்இடம்

**மாவட்ட மட்டச் சமூக விஞ்ஞானப் போட்டி முடிவுகள் - 2014**

சதீஸ்கரன் சயிந்தா தரம் - 10 1ம் இடம்

## Divisional Level English Day Competition - 2015

| | | | |
|---|---|---|---|
| Sivaruban Jalini | Grade - 03 | Recitation | 1st place |
| Kemarathan Tamilnila | Grade - 03 | Recitation | 2nd place |
| Hemabavan Kavitha | Grade - 04 | Recitation | 2nd place |
| Jeganathan Kirushanthini | Grade - 08 | Story telling | 1st place |
| Jeganathan Kirushanthuni | Grade - 08 | Dictation | 3rd place |
| Satheeskaran Sajintha | Grade - 10 | Dictation | 1st place |
| Satheeskaran Sajintha | Grade - 10 | Solo Acting | 1st place |
| Satheeskaran Sajintha | Grade - 10 | Creative writing | 1st place |
| Jeganathan Tharmika | Grade - 11 | Creative writing | 2nd place |
| Vasanthakumar parththeepan | Grade - 11 | Creative writing | 2nd place |
| Vasanthakumar parththeepan | Grade - 11 | Dictation | 2nd place |
| Sanmugarasa Saliny | Grade - 11 | Recitation | 2nd place |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2015 ஆம் ஆண்டு விழாவுக்கான நூல் வெளியீட்டுக்கு அனுசரனை



அமரர் தம்பையா மயில்வாகனம் (முத்துக்குமாரு), ஞானிமடம், அவர்களின் ஞாபகார்த்தமாக இம்மலருக்கான நிதி அவரது பிள்ளைகளால் அன்பளிப்புச் செய்யப்படுகிறது.

**திரு.ம. வரதராசா (இலங்கை)**

**திரு.ம. சற்குணானந்தராசா (கனடா)**

**திருமதி. இராமச்சந்திரன் வனசராணி (சுவிஸ்)**

**திருமதி. பாஸ்கரலிங்கம் சுமதி (இலங்கை )**

## பரிசுப்பொருட்கள் அனுசரணை

**திரு. குலசிங்கம் பிறேமச்சந்திரன்** (பழைய மாணவன்)
சித்தங்குறிச்சி - பூநகரி (சுவிஸ்)

**அழைப்பிதழ் அனுசரணை**
**திரு. கணேசமூர்த்தி ரஞ்சன்**
(குடிநீர் விநியோகம், பழைய மாணவர் ஞானிமடம்,பூநகரி)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










**ச. சயிந்தா**

**சமூக விஞ்ஞானப் போட்டி**

**தேசிய மட்டம் முதலாமிடம்**








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தீபம் பிறிண்டேர்ஸ். 717, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். T.P: 0772506234